விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 14 செவ்வாய்க்கிழமை (27.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 129

## உரும்பிராய் சந்தியில் டிப்பர் - ஹன்டர் விபத்து




▶06

## கொரோனா ஆபத்து நிலை யாழில் தற்போதும் உண்டு

### மாவட்ட அரச அதிபர் க.மகேசன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தீவிர மான கொரோனா தொற்று இல்லையென்றபோதும் ஆபத் தான நிலை இப்போதும் உள்ள தென மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை ஊடகங்களை சந்தித்து ▶19

## இலங்கையில் நாளொன்றில்

# அதிக கொரோனா தொற்றாளர்கள் பதிவு

## நேற்று மட்டும் +997 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொரோனா பரவல் ஆரம்பித்த காலம் முதல் இலங்கையில் நாளொன்றில் அதிகமானோருக்கு நேற்று தொற்றுறுதியாகியுள்ளது. சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் தகவல்களின்படி நேற்றைய தினம் 997 பேருக்கு தொற்றுறுதியாகியுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் மயங்கி விழுந்த முதியவர் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி - வரணிப் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந் ▶19

## கொரோனா 3 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள் ளாகி மேலும் 3 ▶19

## 13 யாழில் பச்சிளம் குழந்தை உட்பட பேருக்கு கொரோனா வைரஸ்

### வடக்கில் 15 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறையில் தாய் மற்றும் பச்சிளம் குழந்தை உட் பட யாழ்.மாவட்டத்தில் 13 பேருக்கு கொரோனா தொற்று உறு திப்படுத்தப்பட்டிருப்பதாக மாகாண சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ் வரன் தெரிவித்துள்ளார்.

இதன்படி பருத்தித்துறையில் நேற்று முன்தினம் தொற்றுக்குள் ளானவரின் மனைவி மற்றும் பச்சிளம் ▶19

## கொரோனா பரவலையடுத்து இலங்கையில் மேலும் சில பகுதிகள் முடக்கம்

(கொழும்பு)

இலங்கையில் காலி மாவட் டத்தில் மேலும் சில பகுதிகளில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் படி காலி மாவட்டத்தின் ரத்கம ▶19

## சொந்த வயல் நிலத்தில் மணல் ஏற்றியவர்களை தடுத்தவர் மீது தாக்குதல்

### கொடிகாமம் கெற்பேலியில் சம்பவம்

(கரணவாய்)

சொந்த வயல் நிலத்தில் மணல் ஏற்றியவர்களை தடுக்க சென்ற வர் மீது தாக்குதல் மேற்கொள் ளப்பட்டதில் அவர் படு காயமடைந்த நிலை ▶19

## அதிகரிக்கும் கொரோனாத் தொற்று மேல் மற்றும் வட மேல் மாகாண பாடசாலைகளுக்கு மீண்டும் பூட்டு

(கொழும்பு)

இலங்கையில் அதிகரித்து வரும் கொரோனாத் தொற்று காரணமாக இரு மாகாணங் களில் உள்ள சகல பாடசாலை களையும் மீண்டும் தற்காலிக மாக மூடுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதற்கமைவாக மேல் மாகா ணம் மற்றும் வட மேல் மாகா ணத்தில் உள்ள சகல பாடசாலைகள், முன் ▶19

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பெண் நோயாளர் விடுதியில் மூவருக்கு கொரோனா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் பெண் நோயாளர் விடுதி மற்றும் வெளிநோயாளர் பிரிவுகளில் சிகிச்சை பெற்ற மூவருக்கு நேற்று திங்கட் கிழமை கொரோனா தொற்று உறு திப்படுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி வடக்கு பகுதியைச் சேர்ந்த ▶19

## இறக்குமதியாகும் உருளைக் கிழங்குக்கு வரி அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப் படும் உருளைக்கிழங்கு மீதான கிறப்பவரி ▶19

## கோவிட் - 19 அதிகரித்தால் பாடசாலைகளை மூடும் அதிகாரம் அதிபர்களுக்கு

### கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

கோவிட் - 19 தொற்றுநோய் பரவுவதைக் கருத்தில் கொண்டு நாடு முழுவ ▶19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வடமராட்சி வத்திராயன் பகுதியில் சீன எழுத்துக்களுடன் கட்டுமானம் அகற்றுவதற்கு பிரதேச செயலர் நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கு - வத்திராயன் பகுதியில் தனியார் ஒருவரினால் அமைக்கப்பட்டிருக்கும் சிறுவர் பூங்காவில் உள்ள சீன எழுத்துக்கள் அகற்றப்படவுள்ளதாகவும் அதற்காக பிரதேச செயலர் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சிறுவர் பூங்காவில் சீன மொழியில் எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்களுடன் கூடிய வரவேற்பு வளைவு தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவிய நிலையில் குறித்த விடயம் தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த கட்டுமானத்தை கட்டியவர் இவ்வாறான ஒரு கட்டுமானத்தை விரும்பவில்லை. ஆனால் கட்டியவர்கள் அதில் சீன மொழியில் எழுத்துக்களை எழுதியுள்ளனர்.

அவர் சீனமொழியை பயன்படுத்துமாறு கூறவில்லை என அறியமுடிகிறது. இந்நிலையில் சீன எழுத்தினை அகற்ற பிரதேச செயலர் நடவடிக்கை எடுத்துள்ளார். (ம-03)


யாழ். கலாலயா பயிற்சியகம்
இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

2020 A/L, 2021 O/L எடுத்த மாணவிகளே! வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே! மற்றும் ஆர்வம் உள்ள மகளிரே!
உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங் - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- உணவு தயாரித்தல் - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS (முக அழகுக்கலை) Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்று விக்கப்படும்.

பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இம்முறை A/L, O/L எடுத்த மாணவிகளுக்கு கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்
02.05.2021 ஞாயிறு காலை 10.00மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்
05.05.2021 புதன் காலை 10.00 மணி

(C-2038) -இயக்குநர்-
Guru



17ஆம் ஆண்டு 1ஆம் ஆண்டு
நினைவலைகள்





தோற்றம் 14.08.1926 மறைவு 17.05.2004
அமரர்
கனகர் கந்தையா

தோற்றம் 21.07.1929 மறைவு 08.05.2020
அமரர்
சின்னம்மா கந்தையா

(C-2046)

திதி : 27.04.2021
எம் வாழ்வினில் ஒளியேற்றி நல்வாழ்வு வாழவைத்து
இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வங்களை
என்றும் நினைவு கூர்வோம்.

தம்மளை,
அளவெட்டி மேற்கு.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


## வற்றாப்பளை பொங்கல்

# காவடி, நேர்த்திக்கடன் வீதியோர கடைகளுக்கு தடை வெளி மாவட்டத்தவருக்கும் தடை

(யாழ்ப்பாணம்)

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் நிகழ்வு சுகாதார கட்டுப்பாட்டுடன் இடம்பெறும் எனவும் வெளிமாவட்டத்தவர்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளதாகவும் முன்னாயத்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வைகாசி விசாக பொங்கல் நிகழ்வு தொடர்பான முன்னாயத்த கூட்டம் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சிவகணேசன் மற்றும் தொற்று நோயியல் தடுப்பு வைத்திய அதிகாரி வி.விஜிதரன், படை அதிகாரிகள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள், முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயம் மற்றும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தினர், பொது சுகாதார பரிசோதகர்கள், மருத்துவர்கள், பிரதேச செயலாளர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு ஆலய பொங்கல் நிகழ்வு நடத்துவது தொடர்பில் தீர்மானம் எடுத்துள்ளார்கள்.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வைகாசி விசாக பொங்கல் நிகழ்விற்கான முன்னாயத்த நிகழ்வுக்கான முன்நிகழ்வுகள் முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் காவடி எடுத்தல் நேர்த்திக் கடன்கள் செய்தல் போன்றவற்றுடன் வீதியோர கடைகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம-03)

## கொரோனாவை கட்டுப்படுத்துவதில்

# இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது பிரதமர் ஐ.நாவிற்கு அறிவிப்பு

(கொழும்பு)

கோவிட்-19 நோய்த் தொற்று பரவுகையை கட்டுப்படுத்துவதில் இலங்கை குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ச, ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு அறிவித்துள்ளார்.

இலங்கையில் கோவிட் மரண வீதம் மிகவும் குறைவானது எனவும், குணமடையும் வீதம் உயர்வு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நோய்த் தொற்றாளர்களை அடையாளம் காணுதல், சிகிச்சை அளித்தல் போன்றவற்றில் நாடு முன்னணி வகிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கோவிட் காரணமாக வெளிநாடுகளில் நிர்க்கதியாகியிருந்த ஒரு இலட்சம் இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும், இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆசிய பசுபிக் வலயத்திற்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் 77ஆம் அமர்வுகளில் மெய்நிகர் தொழில்நுட்பத்தின் ஊடாக இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதில் இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (ம-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பரவலாக்கல் முறைகளை முற்றாக அகற்றுவதில் அரசு குறியாய் உள்ளது

## யாழில் கலாநிதி ஜெஹான் பெரேரா



(கொழும்பு)

ஆட்சிக்கு வந்திருக்கும் அரசாங்கமானது இந்த அதிகாரப் பரவலாக்கல் முறைகளை முற்றாக அகற்றிவிட வேண்டும் எனவும் அதற்கான ஆணையை மக்கள் தமக்கு வழங்கி இருக்கின்றார்கள் என்ற சிந்தனையோடும் தற்போதைய அரசாங்கமானது ஆட்சிப்பீடம் ஏறி இருக்கின்றது.

அது எவ்வாறு என்றாலும் சமாதான சூழலுக்கு பலவிதமான சவால்கள் இருந்து கொண்டிருக்கும் நிலையிலும் கூட எங்களுடைய நம்பிக்கையினை நாங்கள் இழக்கக் கூடாது. தொடர்ச்சியாக அதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை தேசிய சமாதான பேரவையின் நிறைவேற்று இயக்குநர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற தந்தை செல்வாவின் 44 ஆவது நினைவு நாள் நிகழ்வில் ஆற்றிய நினைவுப் பேருரையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த நாட்களிலேயே இலங்கைக்கு பொருத்தமான ஆட்சி முறை சமஷ்டி முறையிலான ஆட்சி முறைதான் சரியானது என குறிப்பிட்டிருந்தார்கள். அதுவும் சுவிட்சர்லாந்து மாதிரியான சமஷ்டி முறையிலான ஒருமுறைதான் இலங்கைக்கு பொருத்தமானது என குறிப்பிட்டுள்ளார்கள்.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை புத்தபெருமான் தங்களுக்கென்று இந்த தீவினை கொடுத்திருக்கிறார் என அவர்கள் நம்புகிறார்கள்.

பௌத்தத்தை பாதுகாப்பதற்கான பொறுப்பு சிங்களவர்கள் கையிலே இந்தத் தீவிலே கொடுக்கப்பட்டு இருப்பதாக நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே செயற்படுவதை நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது. அது ஒரு பக்கம் இருக்க இன்னொரு பக்கத்திலே இந்தத் தீவிலே அவர்கள் மிகப் பெரும்பான்மையான எண்ணிக்கையாக இருந்திருந்தாலும் கூட அவர்கள் மன நிலையானது ஒரு சிறுபான்மை மக்களைப் போன்றதாகவே இருக்கின்றது. சிறுபான்மை மனநிலை உடைய சிங்களவர் பெரும்பான்மையினராக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதற்கு பல காரணங்கள் உண்டு. பிராந்தியத்தை எடுத்துப்பார்த்தால் அதில் அவர்கள் மிக சொற்ப சிறிதளவு எண்ணிக்கையை கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

தமிழர்களைப் பார்க்கும் போது தமிழ் மக்கள் தாங்கள் ஒரு பிரதேசம் என்கின்ற மனநிலையோடு வாழுகிற மக்கள், வேறு பிரதேசங்களில் வாழுகின்ற மற்றவர்களை விட வித்தியாசமாக கலாசாரம், மொழி பின்னணி எல்லாவற்றிலுமே வேறாக இருக்கின்ற ஒரு பிறிதான தேசம் என்ற மனநிலையோடு தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். ஆகவே இந்த இரண்டு இனங்களுக்கு இடையில் இந்த தீவில் எப்படியாக நிர்வாகத்தை செய்வது என்ற கேள்வி எழுகின்றது.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக ஒரு அதிகாரப் பகிர்வு முறை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அது முழுமை பெறாது இருந்தாலும் அது இன்னமும் சீர் செய்ய வேண்டியதாக இருந்தாலும் கூட அதிகாரப் பகிர்வுக்கான ஒரு அடிப்படையை அது கொடுத்திருந்தது. அதனை சீர் செய்து சரி செய்து நிவர்த்தி செய்ய வேண்டும். அதில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

ஆனால்இன்றைக்குநிலைமை எவ்வாறு இருக்கின்றது என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்ளல் நல்லதாக இருக்கும். தற்போது ஆட்சிக்கு வந்திருக்கும் அரசாங்கமானது இந்த அதிகாரப் பரவலாக்கல் முறைகளை முற்றாக அகற்றிவிட வேண்டும் என அதற்கான ஆணையை மக்கள் தமக்கு வழங்கி இருக்கின்றார்கள் என்ற சிந்தனையோடு தற்போதைய அரசாங்கமானது ஆட்சிப்பீடம் ஏறி இருக்கின்றது.

இன்றைக்கு அவர்களுடைய நிலைப்பாடு அதிகாரப் பகிர்வுக்கு எதிரானதாக இருக்கின்றது. அப்படியான சிந்தனையிலேயே இருக்கின்ற வேளையில் தான் யுத்தம் முடிவடைந்த பிறகு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் இலங்கைக்கு வருகை தந்த போது அப்போதிருந்த ஜனாதிபதியுடன் ஏற்படுத்திக் கொண்ட கூட்டு அறிக்கையின் பிரகாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினுடைய சிலர் தலையீடுகள் இருந்து கொண்டிருந்தன.

இந்தத் தடவை இப்படியான வித்தியாசமான சிந்தனையோடு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தோற்றுப் போனது. ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு தீர்மானம் நிறைவேறி இருக்கிறது.

அந்த தீர்மானத்தின் பிரகாரம் இன்னும் பதினெட்டு மாத காலத்திற்கு இலங்கை மீதான கடும் பார்வை கண்காணிப்பு இருக்கும் மேற்பார்வை ஒன்றும் இருக்கும்.

எனவே எமது நாட்டிலும் தமிழர்களாகிய நாம் எமது நம்பிக்கையை இழக்கக் கூடாது. சமாதானத்திற்கான பலவிதமான சவால்கள் இருந்து கொண்டிருக்கும் நிலையிலும் கூட எங்களுடைய நம்பிக்கைகளை நாங்கள் இழக்கக்கூடாது. தொடர்ச்சியாக அதற்கான எங்களுடைய முயற்சிகளை நாங்கள் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும். எந்த வேளையிலும் நம்பிக்கை இழந்தவர்களாக நாங்கள் போய்விடக் கூடாது. தொடர்ச்சியாக எங்களுடைய முனைப்பான முயற்சி இருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-4-33)

## நாளுக்கு நாள் அதிகரிக்கும் தொற்றாளர்கள்; அவசர சிகிச்சைப் பிரிவுகளில் இடப்பற்றாக்குறை

### சுய பரிசோதனை அவசியம் என்கிறார் மருத்துவர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற நிலையில், அவசர சிகிச்சைப் பிரிவுகளில் இடப் பற்றாக்குறை தற்போது நிலவுகின்றதென அரச மருந்தாக்க கூட்டுதாபனத்தின் தலைவர் விசேட வைத்தியர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

நாட்டில்ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், "கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கத்தினை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

இதற்கு மக்கள், தங்களினால் முடிந்த சுய பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். அதனூடாக ஆரம்பத்திலேயே கொரோனா வைரஸ் தொற்றுள்ளமையை இனங்கண்டு, சிகிச்சைப் பெறும்போது குணமடைய முடியும்.

அதாவது, சில சொற்களைப் பேசும் போது சோர்வை உணர்தல், ஒரே மூச்சில் 1-10 வரை எண்ணுவதற்கு சிரமப்படுதல் ஆகிய தன்மைகளை உணர்வீர்களாயின் வைத்திய ஆலோசனை பெற்றுக்கொள்வது சிறந்தது" என அவர் குறிப்பிட்டார். (நி-4)

## இலங்கைக்கு பயணம் செய்ய வேண்டாம் எச்சரிக்கை விடுக்கும் வெளிநாடுகள்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொடர்பில் இலங்கை தற்போது ஆபத்தான கட்டத்தில் இருப்பதால் சில வெளிநாடுகள் இலங்கைக்கான பயண ஆலோசனைகளை புதுப்பித்து மாற்றங்களை செய்துள்ளது.

இவ்வாறு இலங்கைக்கான பயணத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகியவை தமது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளன.

கொரோனா வைரஸ் வழக்குகள் அதிகரித்ததால் இலங்கை 3 ஆம் இடர்நிலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக இங்கிலாந்து குறிப்பிட்டது.

அத்துடன் இலங்கைக்கு பயணம் செய்ய வேண்டாம் என்று அவுஸ்திரேலியா தனது குடிமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

கொரோனா வைரஸ் தொடர்பில் இலங்கை தற்போது ஆபத்தான கட்டத்தில் இருப்பதால் இலங்கைக்காக தமது பயண ஆலோசனைகளை புதுப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## இன்று வருகிறார் சீன பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

இரு நாள் உத்தியோகப் பூர்வ விஜயத்தை மேற்கொண்டு சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் ஃபெங் இன்று செவ்வாய்க்கிழமை இலங்கை வருகின்றார்.



இரு தரப்பு இராஜதந்திர நிரலுக்கமைவாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பாதுகாப்பு துறைசார் முக்கியஸ்தர்களையும் சந்தித்து சீனப் பாதுகாப்பு அமைச்சர் கலந்துரையாடவுள்ளார்.

நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை நாட்டில் தங்கியிருக்கும் ஜெனரல் வெய் ஃபெங் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் துறைமுக நகர் உட்பட முக்கிய சீனத் திட்டங்களையும் பார்வையிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இருதரப்பு வர்த்தகம், முதலீடு, நிதியுதவி மற்றும் மூலோபாய ஒத்துழைப்பு போன்றவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் போன்று இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புகளை அடுத்த கட்டத்திற்கு விரிவுபடுத்துவது சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய்ஃபெங்கின் இலங்கை விஜயத்தின் முக்கிய நோக்கமாக இருக்கலாம் எனக்கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜடேஜா அதிரடி ஆட்டம்

# பெங்களூரின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்தது சென்னை

ஐ.பி.எல்.தொடரின் 19 ஆவது லீக் போட்டி மும்பையில் உள்ள வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இதில் , நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி , சென்னை அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுகள் இழப்புக்கு 181 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அணிசார்பாக, இறுதி நேரத்தில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய ரவீந்திர ஜடேஜா 62 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.


இவர் கடைசி ஓவரில் மாத்திரம் அணிக்கான 37 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். டு பிளெஸிஸ் 50, ருத்துராஜ் கெய்க்வாட் 33, ரெய்னா 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஹர்ஷல் பட்டேல் 3, சாஹல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

192 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணியின் வீரர்கள் பலர் ஒற்றையிலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இதனால் 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 122 ஓட்டங்களை மாத்திரம் பெற்று பெங்களூர் அணி 69 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

தேவ்தத் படிக்கல் 34, கிளென் மக்ஸ்வெல் 22 அதிக பட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.




பந்துவீச்சில், ஒரு ஓட்டமற்ற ஓவருடன் நான்கு ஓவர்கள் பந்துவீசிய ஜடேஜா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இம்ரான் தாகிர் 2, கரன், சர்துல் தாகூர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக ரவீந்திர ஜடேஜா தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை புள்ளிகள் பட்டியலில் இந்த வெற்றியுடன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஐந்து போட்டிகளில் விளையாடி நான்கு போட்டிகளில் வெற்றிபெற்று எட்டுப் புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. (4)

## ஆண்களுக்கான கபடி இறுதிப்போட்டியில் மைக்கல் இளைஞர் கழக அணி சம்பியன்



கரவெட்டி இளைஞர் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று திங்கட்கிழமை கருணாகரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. மைக்கல்அணியை எதிர்த்து கரவெட்டி மத்தி இளைஞர் கழக அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய மைக்கல் இளைஞர் கழக அணி ஆட்ட நேர முடிவில் 47:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (4-6-90)

## முதலாவது சுப்பர் ஓவரில் ஐதராபாத்தை வீழ்த்தியது டெல்லி




ஐ.பி.எல் இருபது-20 தொடரின் 20ஆவது லீக் போட்டியில், டெல்லி கபிடல்ஸ் அணி சுப்பர் ஓவரில் வெற்றிபெற்றுள்ளது.

சென்னை மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற இப்போட்டியில், டெல்லி கபிடல்ஸ் அணியும் சன்ரைசஸ் ஐதராபாத் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி கபிடல்ஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி கபிடல்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 159 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.


160 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சன்ரைசஸ் ஐதராபாத் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை சமநிலை செய்தது. இதனால் போட்டி சுப்பர் ஓவருக்குள் நுழைந்தது.

சுப்பர் ஓவரில், முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசஸ் ஐதராபாத் அணி, 7 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இந்த வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய டெல்லி கபிடல்ஸ் அணி, இறுதி பந்தில் வெற்றி இலக்கை கடந்தது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக பிரித்வீ ஷா தெரிவு செய்யப்பட்டார். (4)

## இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தில் ஊழல் என்கிறார் அர்ஜுன ரணதுங்க



கல்குடா பாசிக்குடாவில் உள்ள உல்லாச விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை கிரிக்கெட் அணியில் நான் தலைமைத்துவம் வகித்த சமயத்தில் நிர்வாகத்தில் சிறந்தவர்கள் இருந்தார்கள்.


இதன் மூலம் எங்களது திறமைகளை வெளிக் கொணர்ந்து உலக கிண்ணத்தை கைப்பற்றினோம்.

ஆனால் தற்போது இலங்கை கிரிக்கெட் அணியில் சிறந்த வீரர்கள் இருந்தும் கிரிக்கட் நிர்வாகத்தின் ஊழல்வாதிகள் அதிகம் உள்ளதால் இலங்கை கிரிக்கெட் அணி பாரிய பின்னடைவை சந்தித்து வருகின்றது.

எனவே இதில் விளையாட்டு அமைச்சர் கூடிய கவனம் செலுத்தி கிரிக்கெட்டை முன்னேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு மீண்டும் கறுப்புப் பட்டியலுக்குள் சேர்க்கப்படும் ஆபத்து- ரணில் எச்சரிக்கை



**(கொழும்பு)**

**2011ஆம் ஆண்டு சர்வதேச பண சுத்திகரிப்பு சம்பந்தமான விடயத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை என்ற பட்டியலுக்குள் சேர்க்கப்பட்டிருந்த இலங்கையை நல்லாட்சி அரசாங்கம் அந்த நிலைமையில் இருந்து மீட்ட போதிலும் தற்போதைய அரசாங்கம் முன்வைத்துள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தின் ஊடாக மீண்டும் நாடு அந்த கறுப்பு பட்டியலில் சேர்க்கப்படும் ஆபத்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்த விடயத்தை முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

எமது நாடு சர்வதேச கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் வெளிப்படைத்தன்மை இல்லாத நாடு என்ற பட்டியலில் 2011 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர், பேச்சுவார்த்தை நடத்தி அந்த பட்டியலில் இருந்து நாட்டை நீக்கினோம். மேலும் நடவடிக்கை எடுக்கவேண்டும்எனக் கூறி எமது நாட்டை கறுப்பு பட்டியலில் சேர்த்தனர்.

நாங்கள் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், 2018ஆம் ஆண்டு முன்வைத்த யோசனையை ஏற்றுக்கொண்டு கறுப்புப் பட்டியலில் இருந்து நாட்டை நீக்கினர்.

இலங்கையை மீண்டும் அந்த பட்டியலுக்குள் சேர்க்க இடமளிக்க முடியாது. இலங்கை மீண்டும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை இழக்க முடியாது எனவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## சாரதி அனுமதிப்பத்திரம் பெற முன்பதிவு செய்தவர்களுக்காக இன்று முதல் திறந்திருக்கும்

(கொழும்பு)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வெரஹேர அலுவலகத்தில் முன்பதிவு செய்து கொண்டவர்களுக்காக இன்று முதல் எதிர்வரும் மே 13 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் பிரிவு திறக்கப்பட்டிருக்கும் என அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்காக 0112 677 877 என்ற தொலை பேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளுமாறு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது. (நி-4)

## ஒத்துழைத்தால் கற்றலை தடையின்றி முன்னெடுக்கலாம்

### வைத்திய நிபுணர் சுதத் சமரவீர

(கொழும்பு)

மாணவர்களின் கல்வி செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக பாடசாலைகளை தொடர்ந்தும் நிர்வகித்துச் செல்வதே பொருத்தமானது. இதற்கு ஆசிரியர்கள் , மாணவர்கள் மற்றும் பெற்றோரின் முழுமையான ஒத்துழைப்பு கிடைக்கப் பெறுமாயின் கற்றல் செயற்பாடுகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

பாடசாலைகள்அனைத்தும் ஆரம்பிக்கப்பட்டு கல்வி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் சில பாடசாலைகளிலும் தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் இதில் உள்ளடங்குகின்றனர்.

எனினும் இவர்களுக்கு பாடசாலைகளுக்குள் தொற்று ஏற்பட்டதை விட , வெளியிடங்களிலிருந்தே தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் மாணவர்களின் கல்வி செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக பாடசாலைகளை தொடர்ந்தும் நிர்வகித்துச் செல்வது பொருத்தமானது.

எனினும் இதன்போது மிக அவதானத்துடனும் பொறுப்புடனும் செயற்பட வேண்டும். குறிப்பாக மாணவர்கள், ஆசிரியர்கள் மாத்திரமின்றி பெற்றோரும் இவ்வாறு பொறுப்புடன் செயற்படுவார்களாயின் சவாலின்றி கற்றல் செயற்பாடுகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்ல முடியும் என அவர் தெரிவித்தார். (நி-4)

## தற்போது நாட்டில் புதிய வைரஸ் காய்ச்சல்

(கொழும்பு)

நாட்டினுள் தற்போது வைரஸ் காய்ச்சல் நிலைமை ஒன்று காணப்படுவதாக விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

டெங்கு காய்ச்சலை போன்று இந்த வைரஸ் காய்ச்சல் நாட்டின் பல்வேறு பகுதிகளில் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். மக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

## அரசாங்கத்தின் நடவடிக்கை நாட்டின் ஜனநாயகத்துக்கு பாரிய அச்சுறுத்தல்

கொழும்பு)

அரசாங்கம் மனிதாபிமானமற்ற முறையில் செயற்பட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களை அடக்க முற்படக்கூடாது.

அரசாங்கத்தின் இந்த நிலைமை நாட்டின் ஜனநாயகத்திக்கு பாரிய அச்சுறுத்தலாகும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் தெரிவித்தார்.

அரசாங்கம் எதிர்க்கட்சி உறுப்பினர்களை அடக்கி அச்சுறுத்துவதற்கு மேற்கொண்டுவரும் நடவடிக்கை தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் மனிதாபிமானமற்ற முறையில் செயற்பட்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் வாயை மூட முயற்சிக்கின்றது. யாராவது தவறு செய்திருந்தால் அவர்களை கைதுசெய்ய அல்லது விசாரணைக்கு அழைப்பதற்கு நாட்டில் முறையான சட்டம் இருக்கின்றது. அதன் பிரகாரமே செயற்படவேண்டும்.

மாறாக மனிதாபிமான முறையில் செயற் [illegible] பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் கைதுசெய்யப்பட்டிருப்பது ஏப்ரல் தாக்குதல் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டாகும்.

ஆனால் ஏப்ரல் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் றிசாத் பதியுதீன் பொறுப்புக்கூற வேண்டியவராக தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

அத்துடன் ஏப்ரல் தாக்குதல் தொடர்பான பல தகவல்களை பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, றிசாத் பதியுதீன் போன்றவர்கள் பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றனர். அவர்கள் வெளிப்படுத்தியுள்ள தகவல்கள் தொடர்பில் ஆராய்ந்து விசாரணை செய்ய வேண்டியது குற்றப்புலனாய்வுத் துறையின் பொறுப்பாகும்.


இவ்வாறான பழிவாங்கும் அரசியல் கலாசாரத்தை நாங்கள் இல்லாமலாக்க வேண்டும். இந்த நிலைமை தொடருமானால் நாட்டின் எதிர்காலத்துக்கு அது பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிப்பர்- ஹன்டர் விபத்து 15 இராணுவத்தினர் காயம்

(நல்லூர்)

யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்திப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் 15 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர். கைதடி - மானிப்பாய் வீதி ஊடாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனமும் யாழ்ப்பாணம் - பலாலி வீதி வழியாக இராணுவத்தினரை ஏற்றிச்சென்ற ஹன்டர் வாகனமும் உரும்பிராய் சந்தியில் மோதி விபத்துக்குள்ளாகின.




இவ் விபத்தில் டிப்பர் வாகனம் குடை சாய்ந்தது, இராணுவத்தினரின் வாகனமும் கடும் சேதத்திற்கு உள்ளானது. இதில் காயமடைந்த இராணுவத்தினர் 15 பேரும் யாழ். போதனா வைத்தியசாலையின் 24 ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்தில் சேதமடைந்த இராணுவ வாகனம் பலாலி இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை இராணுவ அதிகாரிகளும் கோப்பாய் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டுவருகின்றனர். (5-4-33)



அரசகரும மொழி திணைக்களத்தினரால் நடத்தப்படும் சிங்கள மொழி கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் தென்மராட்சியில் சிங்கள மொழி கற்ற அரச உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளி கொடிகாமம் சுட்டிபுரத்தில் அமைந்துள்ள அரசகரும மொழி அபிவிருத்தி நிலையத்தில் அரசகரும மொழித் திணைக்களப் பணிப்பாளர் பிறின்ஸ் சேனாதீர தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன், தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி.உஷா சிவலிங்கம் மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படம்:-விஜயவர்சன்)

## வீதிச் சமிக்ஞை விளக்குகளை இயக்க வைக்குமாறு கோரிக்கை

(வரணி)

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொடிகாமம் சந்தியில் பொருத்தப்பட்டுள்ள வீதி சமிக்ஞை விளக்கினை இயங்க வைக்குமாறு வாகனச் சாரதிகளும் , பயணிகளும் உரிய தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக மேலும் குறிப்பிடுகையில், கொடிகாமம்-பருத்தித்துறை வீதி அபிவிருத்திப் பணிகள் நடைபெறுவதால் அதிகளவான வாகனங்களும் மக்களும் இந்த வீதியைப் பயன்படுத்துவதனால் வீதி விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன.

ஏ-9 வீதியுடன் இந்த வீதி இணைவதால் முக்கியமானதொரு சந்தியாக கொடிகாமம் சந்தி காணப்படுகிறது. சாவகச்சேரி பிரதேச சபை , பொது அமைப்புக்கள் மற்றும் பயணிகள் போன்றோர் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக வீதிச் சமிக்ஞை விளக்குகள் சபையினரால் பொருத்தப்பட்டுள்ள போதும் இதுவரைக்கும் இயங்க வைக்காமையினால் தாம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக வாகனச் சாரதிகளும் பொது மக்களும் குறிப்பிடுகின்றனர்.

எனவே இதனை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (5-4-103)



நீர்வேலி கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா 26 ஆம் திகதி நேற்று பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

(படங்கள்-:-சிவசாந்தன்)

## சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சித்திரை மாத சங்கடஹர சதுர்த்தி விரதத்தை முன்னிட்டு எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு அபிஷேகமும் தொடர்ந்து மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருதலும் இடம் பெறவுள்ளது. (5)



உலக புத்தக தினத்தை முன்னிட்டு "எங்கட புத்தகங்கள்" குழுமம் சிறகுகள் அமையத்துடன் இணைந்து நடத்திய ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் கடந்த வியாழக்கிழமை கோண்டாவிலில் அமைந்துள்ள எழுதிரள் நிலையத்தில் ஆரம்பமாகியது. இக் கண்காட்சியைப் பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் கலந்து கொணடு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

(படங்கள் -ரவிசாந்)



சித்திராப் பூரணை தினத்தை முன்னிட்டு நேற்றுத் திங்கட்கிழமை காலை யாழ்.வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான [illegible] தீர்த்த [illegible] செய்து [illegible] தீர்த்தமாடியதுடன் இறந்த தமது தாய்மாருக்காக சிவாச்சாரியார்கள் முன்னிலையில் பிதிர்த் தர்ப்பணங்களும் செய்து கொண்டனர்.

(படங்கள்:- செ.ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசியமற்ற செயற்பாடுகளுக்கு ஒரு மாதமேனும் கட்டுப்பாடு விதிக்க வேண்டும்-அமைச்சர் சுதர்ஷினி!



**(கொழும்பு)**

**அத்தியாவசியமற்ற செயற்பாடுகள், பயணங்கள் ஆகியவற்றுக்கு குறைந்தது ஒரு மாதமேனும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என தான் கருதுவதாக ஆரம்ப சுகாதார, தொற்றுநோய்கள் மற்றும் கொவிட்-19 நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண் டோபுள்ளே தெரிவித்துள்ளார்.**

இந்தியாவின் நிலைமை மற்றும் நாட்டிலுள்ள பொது ஒத்துழைப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தனிப்பட்ட முறையில் ஒரு மருத்துவ நிபுணராக அத்தியாவசியமற்ற செயற்பாடுகளை ஒரு மாதத்துக்கேனும் கட்டுப்படுத்த வேண்டும் என தான் கருதுவதாக மருத்துவர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கருத்து வெளியிட்டுள்ளார்.

வேலை, கல்வி மற்றும் அவசிய பொருளாதார நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். சுற்றுலாக்கள் உள்ளிட்ட அத்தியாவசியமற்ற அனைத்துப் பயணங்களும் ஒரு மாதங்களுக்கு கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஒரு மாத கட்டுப்பாடுகளுக்குப் பின்னர் நிலைமையை மறுபரிசீலனை செய்யலாம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தமிழ்-சிங்கள புத்தாண்டு விடுமுறை காலப்பகுதியில் தொற்று நோயைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு கோரப்பட்ட போதிலும் போதிய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. அதனால்தான் இப்போது கட்டுப்பாடுகள் தேவைப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## ஆபத்தான நிலையில் திருகோணமலை ஆளுநர் தகவல்

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தின் பூம்புகார் கிராம உத்தியோகத்தர் பிரிவு நேற்றிரவுடன் தனிமைப்படுத்தப்பட்டது.

அங்கு 56 பேர் கொவிட் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் இவ்வாறு கொவிட் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட 56 பேரில் அதிகமானவர்கள் திருகோணமலை நகரில் பல இடங்களில் சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபடுகின்றவர்களாவர்.

அதனால் திருகோணமலை நகர்ப்பகுதியில் மேலும் பலர் கொவிட் நோயுடன் அடையாளங் காணப்படக் கூடும் என மாகாண ஆளுநர் தெரிவித்தார்.(நி-4)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: மூலம்
கி.பா: 8 செவ் 3 சூரி 6 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: M.B.B.S Doctor
எதிர்பார்ப்பு: Doctor விரும்பத்தக்கது
தொ.இ: B/11801

பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: பூராடம்
கி.பா: செவ் 4 சூரி 3 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: உடற்பயிற்சி ஆசிரியர் (தனியார்)
எதிர்பார்ப்பு: உள்நாடு. வெளிநாடு (முக்கியம்)
தொ.இ: B/11803

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 20 செவ் 7 சூரி 10 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L, Work-Insurance
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த உத்தியோகம் உள்ள பெண்
தொ.இ: B/11806

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 17 1/2 செவ்.சூரி 9 இல் உயரம்:5'5"
தகைமை/தொழில்: BSc,MBA, மார்க்கட்டிங் உயர் அதிகாரி
எதிர்பார்ப்பு: அரச தொழில் ஆசிரியர், அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.இ: B/11808

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1996 இந்து நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 25 1/4 செவ் 2 சூரி 3 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: HNDA
எதிர்பார்ப்பு: தகுந்த தனியார் அரசாங்க உத்தியோகம்
தொ.இ: G/11802

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 52 செவ் 8 சூரி 5 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSc, Higher Education
எதிர்பார்ப்பு: தகுந்தவரன். வெளிநாடும் பார்க்கலாம்
தொ.இ: G/11804

பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 16 செவ் 9 சூரி 10இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, பட்டதாரிப் பயிலுநர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி. நிரந்தர வேலை. உள்நாடு
தொ.இ: G/11805

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: செவ் 3 சூரி 10 இல் உயரம்: 158cm
தகைமை/தொழில்: O/L, காமென்ஸ்
எதிர்பார்ப்பு: நல்ல குணமான. தொழில் புரியும் சைவ மணமகன். வெளிநாடும் பார்க்கலாம்
தொ.இ: G/11807

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## சுற்றுலாப் பயணிகள் வருகையில் தடை ஏதும் இல்லை-பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

நாட்டுக்குள் நுழைவதற்கான எல்லைக் கட்டுப்பாடுகள் ஏதும் விதிக்கப்படவில்லை என்றும் அவ்வாறு சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருவதைத் தடுத்தால் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆகவே சுற்றுலாப் பயணிகள் தொடர்ந்து நாட்டிற்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் இலங்கையர்கள் வெளிநாட்டிலிருந்து நாடு திரும்புவார்கள் என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர்கள் நாட்டிற்குள் நுழையும்போது கடுமையான சுகாதார நடைமுறைகள் அமுல்படுத்தும் செயற்பாடு தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதன்படி கட்டுநாயக்க விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனை நடவடிக்கை இடம்பெறும் என்றும் அதில் தொற்று உறுதி செய்யப்பட்டால் தனிமைப்படுத்தப்படுவார்கள் என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக நாட்டிற்கு திரும்பிய இலங்கையர்களிடையே பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என குறிப்பிட்ட அமைச்சர், இலங்கை தற்போது ஆபத்தான சூழ்நிலையை எதிர் கொண்டுள்ளது என்றும் தெரிவித்தார். (நி-4)

## தனித்துச் செல்கிறார் மைத்திரி வெளியானது உறுதியான முடிவு



(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் நடைபெறும் அனைத்து தேர்தல்களிலும் கை சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் எனும் தீர்மானத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன எடுத்துள்ளார்.

இத்தகவலை, அக்கட்சியின் பொதுச் செயலரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர வெளியிட்டுள்ளார். இனி எந்த அரசியல் கட்சியிலும் கூட்டணி கொள்வதில்லை என மைத்திரி முடிவு செய்துள்ளார்.

அடுத்த மாகாண சபைத் தேர்தலில் தனித்தே போட்டியிடப் போவதாகவும் அதற்காக தற்போது வரை 3000 விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாகவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். (நி-4)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இரு நாட்களுக்கு மூடப்பட்டது

(கொழும்பு)

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைமை அலுவலகம் இன்று செவ் வாய்க்கிழமை மற்றும் நாளை மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியானதை அடுத்தே இரு நாட்களுக்கு மூடப்படும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடக பேச்சாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை அரச அலு வலகத்தில் கலந்து கொள்ள வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கையை தீர்மானிக்க அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அதிகாரம் வழங்கும் சுற்றறிக்கை இன்று வெளியிடப்படவுள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் மேலும் 18 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது

(நெளுக்குளம்)

வவுனியாவில் 18 பேருக்கு கொரோனாத் தொற்று இருக்கின்றமை நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வவுனியா பூந்தோட்டம் கல்வியியற்கல்லூரியில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள 18 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்து அழைத்து வரப்படுபவர்கள் மற்றும் தென்பகுதிகளைச் சேர்ந்த பலர் குறித்த தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலருக்கு கடந்த சனிக்கிழமை பி.சி.ஆர்.பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

அதன் முடிவுகளின் அடிப்படையில் 18 பேருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (5-4-299)



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஊரியான் குளம் நீர்ப்பாசன செழுமை தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் புனரமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று ஆரம்பமானது.

(படம்: யதுபாஸ்கரன்)

## கழிவுப் பொருட்களால் பந்தயக் கார் வடிவமைப்பு



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் வசித்து வரும் பா.யுவிகன் என்ற நபர் மாதிரி பந்தயக்கார் ஒன்றை உருவாக்கியுள்ளார்.

முற்றிலும் கழிவுப் பொருட்களைக் கொண்டு குறித்த மாதிரிக்கார் உருவாக்கப்பட்டுள்ளது.

எவ்வித பொருளாதார பின்னணியும் இல்லாமல் கூலித் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட அவர் தனது வேலை முடிந்து கிடைக்கும் நேரங்களில் குறித்த மாதிரிக்காரை உருவாக்கி அதை பரீட்சித்து பார்த்து வெற்றி அடைந்துள்ளார். (5-4-299)

# சட்டவிரோத தொழில்களை கட்டுப்படுத்த புதிய பொறிமுறை அவசியம்

(அக்கராயன்)

**முல்லைத்தீவு நந்திக் கடலில் சட்டவிரோத தொழில்களை கட்டுப்படுத்துவதற்கு புதிய பொறிமுறை அவசியம் என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் பிறெட்றிக் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது. நந்திக் கடலில் தடை செய்யப்பட்ட தொழில் தொடர்கின்றது. வலை விரித்து தொழில் செய்ய முடியாது. வலை வீசித்தான் தொழில் செய்ய முடியும். ஆனால் நந்திக் கடலில் வலை விரிக்கப்பட்டு தொழில் நடைபெறுகிறது.

இது தடை செய்யப்பட்ட தொழிலாகும். நந்திக் கடலில் தடை செய்யப்பட்ட தொழில் தொடருமானால் நந்திக் கடலினை நம்பியுள்ள ஐயாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்.

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசமும் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களமும் இணைந்து சட்டவிரோத தொழில்களைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆனால் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தனியாக செயற்படுவதன் காரணமாக சட்டவிரோத தொழில்களை நந்திக் கடலில் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சருக்கும் தகவல் தெரியப்படுத்தி உள்ளோம் எனவும் தெரிவித்தார். (5-4-350)




# மின் விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்கவும்

(அக்கராயன்)

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்திற்கு மின் விளக்குகள் பொருத்துவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டுமென அப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டுள்ள கடற்றொழிலாளர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நந்திக்கடலில் இரவு வேளைகளில் தொழிலில் ஈடுபடுபவர்கள் தமது கடல் உணவுகளை தெரிவு செய்கின்ற இடமாக வட்டுவாகல் பாலத்தினை பயன்படுத்துவதன் காரணமாக இருட்டு வேளைகளில் விபத்துகள் ஏற்படக் கூடிய அபாயம் உள்ளது. எனவே வட்டுவாகல் பாலப் பகுதியில் மின் குமிழ்கள் பொருத்தப்பட்டு வெளிச்சம் ஊட்டப்பட வேண்டும் என்ற பிரேரணைகள் கரைதுறைப் பற்று பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டன.

வட்டுவாகல் பாலத்தில் மின் விளக்குகள் பொருத்தப்படும் என்ற உறுதி மொழிகள் வழங்கப்பட்ட நிலையில் தற்போதும் வட்டுவாகல் பாலம் இருளில் மூழ்கி உள்ளது.

எனவே பிரதேச சபை வெளிச்சம் பொருத்துவதற்கான நடவடிக்கையினை எடுக்குமாறு கடற்றொழிலாளர்களினால் வலியுறுத்தப்பட்டுள்ளது. (5-350)

# உப தபாலகம் அமைக்கப்பட வேண்டும் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர்

(அக்கராயன்)

கிளிநொச்சி பிரமந்தனாறு கிராமத்தின் கொளுந்துப்பிளவு, மயில்வாகனபுரம் ஆகிய கிராமங்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளதாக கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் திருமதி.த.செல்வராணி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விசுவமடுச் சந்தியின் ஊடாக காலை 6.45 மணிக்கு பிரமந்தனாறு சந்திக்குப் பயணிக்கும் பேருந்து கல்லாறு வரை செல்கிறது.

மயில்வாகனபுரத்திற்கோ கொளுந்துப்பிளவிற்கோ குறித்த பேருந்து சேவை இடம் பெறுவதில்லை.

பிரமந்தனாறு, மயில்வாகனபுரம், கொளுந்துப்பிளவு ஆகிய கிராமங்களின் வீதிகள் குண்டும் குழியுமாகவே காணப்படுகின்றன. பிரமந்தனாறு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 741 குடும்பங்கள் உள்ளன.

மயில்வாகனபுரம், கொளுந்துப்பிளவு ஆகிய கிராமங்களில் மட்டும் 321 குடும்பங்கள் உள்ளன.

இதேவேளை பிரமந்தனாறு பகுதியில் உப தபாலகம் இல்லாததன் காரணமாக மாதாந்த உதவித் தொகை பெறும் முதியவர்கள் தருமபுரம் உப தபாலகத்திற்கே செல்ல வேண்டி உள்ளது.

எடுக்கின்ற உதவிப் பணம் போக்குவரத்திலேயே முடிந்து விடும். பிரமந்தனாறில் உப தபாலகம் ஒன்றும் அமைக்கப்பட வேண்டும் எனவும் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (5-4-350)



ஒட்டுசுட்டான் செல்வபுரம் இந்துபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் பீனிக்ஸ் இளைஞர் கழகம், இளந்தளிர் விளையாட்டுக்கழகம் என்பவற்றின் ஏற்பாட்டில் இரத்ததான முகம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

(படம்: -கிருஷ்ணகுமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

27.04.2021
சித்திரை 14, செவ்வாய்க்கிழமை,
பூரணை முற்பகல் 9.59 மணிவரை
சுவாதி முன்னிரவு 9.44 மணிவரை
சுபநேரம் 10.29-11.59 மணிவரை
இராகுகாலம் 2.59-4.29 மணிவரை
சந்திராஷ்டமம்- உத்திரட்டாதி, ரேவதி

வளவன்


மேஷம்
தொலைபேசி வழியில் மகிழ்ச்சிதரும் தகவல்கள் வந்து சேரலாம், களஸ்திர நன்மையுண்டு, முயற்சியில் முன்னேற்றம் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.


ரிஷபம்
பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.


மிதுனம்
குடும்பத்தில் குதூகலம் கூடும், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வாகன சுகமுண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும்.


கடகம்
பெற்றோர் மீது பிரியம் கூடும், விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.


சிம்மம்
நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், பகை விலகும், நினைத்த காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள்.


கன்னி
திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடித்து முன்னேற்றம் காண்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு.


துலாம்
கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


விருச்சிகம்
பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரியங்களில் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், ஆதாயமில்லாத பயணங்கள் இடம்பெறலாம்.


தனுசு
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டி வெற்றி பெறுவீர்கள்.


மகரம்
பெண்களால் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், செய்தொழில் மேன்மையுண்டு.


கும்பம்
ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பயணங்ளால் பலனுண்டு.


மீனம்
கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உறவினர் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

சூதாட்டத்தை தூக்கி எறிவதே சிறந்த பகடை வீச்சு

# சில்லறை சலுகைகளுக்கு அடிபணியாது இலக்கை நோக்கி தொடர்ந்து பயணிப்போம்

(திருமலை)

நாம் சில்லறை சலுகைகளுக்கு அடிபணியாமல் இலக்கை நோக்கியே தொடர்ந்து பயணிப்போமென திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவினுடைய 44 ஆவது நினைவேந்தல் திருகோணமலையிலும் நேற்று திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டில் பாரிய ஆட்சி மாற்றமொன்று ஏற்பட வேண்டும். அனைத்து மக்களுக்கும் இன, மத பேதமின்றி சகல விதமான சலுகைகளும் வழங்கப்பட வேண்டும் என்ற எண்ணத்திலேயே தந்தை செல்வா 1949 ஆம் ஆண்டு கட்சியை ஆரம்பித்தார்.

நாங்களும் அவரது கொள்கைகளுக்கமையவே கடந்த 70 வருடங்களாக பயணித்து வருகின்றோம். அதிகளவான கட்சிகள் அவரது நிலைப்பாட்டினை ஏற்றுக்கொண்டுள்ளன.

அந்த வகையில் நாமும் அவைகளை அடையக்கூடிய நிலையிலேயே தற்போது இருக்கின்றோம். சில பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில்



பெரும்பாலான பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்து இருக்கின்றோம்.

எதிர்வரும் காலங்களிலும் எங்களது இலக்கில் இருந்து விலகாமல், சில்லறை சலுகைகளுக்கு அடிபணியாமல் இலக்கை நோக்கி பயணிப்பதன் ஊடாக மாத்திரமே நாம் வெற்றியடைய முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறுவோர் தொடர்பில் நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்பு!

(கொழும்பு)

பொது போக்குவரத்து சேவையில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறி செயற்படுபவர்கள் தொடர்பில் கண்காணிப்பதற்கு விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

பயணிகள் தனிமைப்படுத்தல் விதிகளை பேணுகின்றார்களா? என்பது தொடர்பில அவதானத்துடன்செயற்படவேண்டிய பொறுப்பு சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும் உள்ளதாக பொலிஸ் போச்சாளர்பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் சகல போக்குவரத்து பொலிஸாருக்கும் அறுவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய பொது போக்குவரத்துகளில் தனிமைப்படுத்தல் விதிகள் தொடர்பில் அவர்கள் ஆராயவுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (நி-4)

# பொல்லால் தாக்கப்பட்டு இளைஞன் படுகொலை

(கொழும்பு)

இளைய சகோதரன் பொல்லால் தாக்கி மூத்த சகோதரன் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் மினுவாங்கொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றதாக பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதோடு , கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார். மினுவாங்கொடப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

புத்தாண்டுக்கு முன்னரும் புத்தாண்டின் பின்னரும் இவ்வாறு குடும்ப அங்கத்தவர்களுக்கிடையில் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் கவலைக்குரியதாகும். எனவே இவற்றை தவிர்த்துக் கொள்ளுமாறு சகலரிடமும் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் தெரிவித்தார். (நி-4)

# சீன பாதுகாப்பு அமைச்சரின் விஜயம் தொடர்பில் சந்தேகம்

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரத்தை சீனாவின் காலனியாக்கும் முயற்சிகளில் அரசாங்கம் தீவிரமாக செயற்பட்டு வருகிறதாக எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

இவ்வாறாதொரு நிலையில் சீன பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்கின்றமை பாரிய சந்தேகத்தை ஏற்படுத்துகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியை கண்டுபிடிப்பதில் தோல்வியடைந்துள்ளமையை மறைப்பதற்காக றிசாத் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் மக்கள் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என வலியுறுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# ஒரே நேரத்தில் பணியாற்றுவோர் தொகையை மட்டுப்படுத்த முடிவு

## பொது நிர்வாக அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் அதிகரித்துள்ள நிலையில் அலுவலகங்களில் ஒரே நேரத்தில் பணியாற்றும் அரச ஊழியர்களின் தொகையை மட்டுப்படுத்த பொது நிர்வாக அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரச ஊழியர்களை ஒவ்வொரு பிரிவினராக கடமைக்கு அழைப்பதற்கான அறிவுறுத்தல் அடங்கிய சுற்றுநிருபமொன்று இன்று வெளியிடப்பட உள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## எல்லோருமே கெட்டவர்கள்தான்

முன்னொரு காலத்தில் அங்கிரசர் என்றொரு ரிஷி, வனத்தில் வசித்து வந்தார். அவர் மிகவும் புகழ் பெற்றவர். அவரிடம் மாணாக்கர்கள் பலர் இருந்தனர்.

அவருடைய ஞானத்தில்இருந்து கணிசமான அனுகூலத்தை அவர்கள் பெற்றிருந்தனர் எனலாம்.


அந்த மாணவர்களில் சிலர், பக்தியும், கடமையுணர்வும் கொண்டவர்கள். மற்றவர்களை விட எளிதில் எதையும் கிரகித்துக் கொள்ளக் கூடியவர்களாக அவர்கள் இருந்தனர்.

அவர்களுடைய நற்பண்புகள் காரணமாக மற்ற மாணவர்களால் அவர்கள் மதிக்கப்பட்டனர். ஆனால், அறிவுக் கூர்மையற்ற சிலர் மட்டும், அந்த நல்ல மாணவர்களிடம் பொறாமை கொண்டிருந்தனர்.

குருவின் உபதேசங்களைக் கிரகித்துக் கொள்ளும் திறன் தங்களிடம் குறைவாயிருப்பதை அவர்கள் மறந்துவிட்டனர்.

ஏனோ குருவின் பாரபட்சமற்ற தன்மையில் அவர்களுக்குச் சந்தேகம். அவர் பக்தியுணர்வுடைய மாணவர்களுக்கு மட்டும் ரகசியமாக விசேஷ அறிவைப் புகட்டுவதாக எண்ணிக் கொண்டனர்.

ஒருநாள் குருதேவர் தனித்திருந்த போது அவரிடம் சென்று, "ஐயனே!



தாங்கள் பாடம் கற்பிப்பதில் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்று சந்தேகப்படுகிறோம்.

தேர்ந்தெடுத்த சிலருக்கு மட்டும் உங்கள் ஞானத்தின் முழுப் பலனையும் நீங்கள் வழங்குவதாய் கருதுகிறோம்.

ஏன் எங்களுக்கும் அந்தச் சலுகையை விரிவுபடுத்தக் கூடாது?"என்று கேட்டனர். குருதேவர் அந்த வார்த்தைகளைக் கேட்டு அதிர்ந்தார். ஆனாலும், அமைதியாகப் பதிலளித்தார்.

"நான் உங்கள் அனைவரையும் ஒரே மாதிரிதான் மதித்து நடத்துகிறேன். யாருக்கும் தனிப்பட்ட முறையில்சலுகை காட்டவில்லை.

உங்களில் சிலர் விரைவாக முன்னேறியிருந்தால், நான் சொல்கிறவற்றை அவர்கள் ஊன்றிக் கவனித்திருக்க வேண்டும். நீங்களும்அவ்வாறு முயன்று கற்பதை யார் தடுத்தது?" என்று கேட்டார் அவர்.

(தொடரும்)

# மகாபாரதம்




உலகில்தனியாக உலா வருபவன் யார் - சூரியன், உலகில் மிகச் சிறந்த தர்மம் எது - கொல்லாமை, உலகெங்கும் நிறைந்திருப்பது எது - அஞ்ஞானம்(முக்திக்கு உரிய வழிஎது - பற்றினை முற்றும் விலக்குதல்

யாரிடம் கொண்ட நட்பு மேன்மை உடையது - சாதுக்களிடம் கொண்ட நட்பு, நாட்டுக்கு உயிர் போன்றவன் யார் - அரசன், எது ஞானம் - மெய்ப்பொருளை (கடவுள்) அறிவதே ஞானம்

ஒருவனுக்கு பகையாவது எது - கோபம், முக்திக்கு தடையாக இருப்பது எது - "நான்" என்னும் ஆணவம், பிறப்புக்கு வித்திடுவது எது - ஆசை

எப்போதும் நிறைவேறாதது எது - பேராசை, யார் முனிவர் - ஆசை அற்றவர், எது நல்வழி - சான்றோர் செல்லும் வழி

எது வியப்பானது - நாள்தோறும் பலர் இறப்பதைக் கண்ட போதும் தனக்கு மரணம் இல்லையென்று மனிதன் கருதுகின்றானே அதுதான் வியப்பானது

மீண்டும் பிறவி வராமல் இருக்க ஒருவர் என்ன செய்ய வேண்டும் - எப்போதும் நல்லறமே செய்தல் வேண்டும்.

தருமரின் பதில்களில் திருப்தியடைந்த யட்சன் "தருமரே..உமது தம்பியரில் யாருக் கேனும் உயிர் தருகிறேன். யாருக்கு வேண்டும்?" எனக் கேட்க தருமர் "நகுலன் உயிர் பெற வேண்டும்" என்றார்.

உன் உடன் பிறந்த மகாவீரர்களான அர்ச்சுனன், பீமனை விடுத்து நகுலன் உயிரை ஏன் விரும்புகிறாய் என்ற யட்சனுக்கு தருமர் "என் தந்தைக்கு குந்தி,மாத்ரி என இரு மனைவியர்.

இருவருமே எங்களுக்கு தாயார்கள் தான் ஆயினும் இருவரும் புத்திரர் உள்ளவராக விரும்புகிறேன்" என்றார்.

தருமரின்..பரந்த மனதைப் பாராட்டிய யட்சன் "எல்லோரும் உயிர் பெறட்டும்" எனக் கூற உறங்கி எழுவது போல அனைவருமெழுந்தனர்.

பின்னர் தன்னை பல கேள்விகள் கேட்ட யட்சனை தருமர்ஒரு கேள்வி கேட்டார். "யாராலும் வெற்றி கொள்ள முடியாத என் தம்பியரை மாய்த்துப் பின் உயிர் பெறச் செய்த தாங்கள் யார்" என்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோரத்தாண்டவத்தின் உச்சம்

# 72 மணித்தியாலத்தில் 10 இலட்சம் தொற்று

## உலகின் அதிகபட்ச தொற்று இதுவாகும்

(டில்லி)

**இந்தியாவில் தொடர்ந்து 5 ஆவது நாளாக நேற்றும் கொரோனா தொற்று நோயாளர் எண்ணிக்கை 3 இலட்சத்தைக் கடந்து பதிவாகியுள்ளது.நேற்று முன்தினத்திலிருந்து கடந்த 72 மணி நேரங்களில் மட்டும் உலகில் மிக உச்சபட்சமாக 10 இலட்சம் கொரோனா தொற்று நோயாளர்கள் இந்தியாவில் உறுதி செய்யப்பட்டுள்ளனர்.**


கொரோனா வைரஸ் தொற்றின் ஆரம்பத்தில் இருந்து இதுவரை உலகில் எங்கும் இல்லாதவாறு நேற்று முன்தினம் மட்டும் இந்தியாவில் 3 இலட்சத்து 52 ஆயிரத்து 991 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தியாவில் மிக அதிகளவாக நேற்று முன்தினம் மட்டும் 2 ஆயிரத்து 812 பேரை கொரோனா வைரஸ் பலியெடுத்தது.

மூன்றரை இலட்சத்தைக் கடந்த புதிய தொற்று நோயாளர்களுடன் இந்தியாவில் மொத்த தொற்று நோயாளர் எண்ணிக்கை ஒரு கோடியே 73 இலட்சத்து 13 ஆயிரத்து 163 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், இந்தியாவில் கொரோனாவுக்கு பலியானவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 95 ஆயிரத்து 123ஆக உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் 2 இலட்சத்து 19 ஆயிரத்து 272 பேர் குணமடைந்தனர். இவர்களுடன் தொற்று நோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 43 இலட்சத்து 4 ஆயிரத்து 382ஆக பதிவாகியுள்ளது. (நி-4-8)



## 99 நாட்களில் 14 கோடி தடுப்பூசி சாதனை படைத்தது இந்தியா

(டில்லி)

99 நாட்களில் 14 கோடி தடுப்பூசிகளை இந்தியா வழங்கியுள்ளதாக இந்திய மத்திய சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி வரையிலான புள்ளி விபரங்களின்படி மொத்தம் 14 கோடியே 9 இலட்சத்து 15 ஆயிரத்து 417 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

இந்தத் தொகை தடுப்பூசி போடும் அளவுகளை அடைய அமெரிக்க 104 நாட்களை எடுத்துக்கொண்டது. சீனா 112 நாட்களில் 14 கோடி தடுப்பூசிகளைப் போட்டுள்ளது. எதிர்வரும் மே 1 முதல் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பயனாளிகளுக்கும் தடுப்பூசி போடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4-8)


## ஸ்டெர்லைட் ஆலையில் ஒட்சிசன் உற்பத்தி

(சென்னை)

ஒட்சிசன் உற்பத்திக்காக மட்டும் ஸ்டெர்லைட் ஆலை யை திறக்க தமிழக அரசு நேற்று அனுமதியளித்துள்ளது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையில் 4 மாதத்துக்கு மட்டும் ஒட்சிசன் தயாரிக்க தற்காலிகமாக அனுமதிப்பதாக அனைத்து கட்சி கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உற்பத்தி செய்யப்படும் ஒட்சிசன் விநியோகத்தில் தமிழகத்துக்கே முன்னுரிமை வழங்க வேண்டும். ஸ்டெர்லைட்டை கண்காணிக்க தூத்துக்குடி கலெக்டர் தலைமையில் குழு அமைக்கப்படும் என அரசு தீர்மானித்துள்ளது. (நி-4-8)

## விமானம் நொருங்கியதில் நான்கு பேர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஆர்கன்சாஸ் மாநிலத்தில் இலகுரக விமானம் விபத்துக்குள்ளானது. கடந்த வெள்ளிக்கிழமையன்று நான்கு பேருடன் ஒக்லஹோமாவின் விமான நிலையமான மஸ்கோகியில் இருந்து வடக்கு புளோரிடாவில் உள்ள வில்லிஸ்டன் நோக்கி புறப்பட்டது.

ஆனால் அன்று மாலை 5 மணியளவில், ஆர்கன்சாஸ் மாநிலம் லிட்டில் ராக் அருகே சென்றபோது ரேடார் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதையடுத்து விமானத்தை தேடும் பணி நடைபெற்றது.

லிட்டில் ராக் அருகில் வசித்த மக்கள், விமானம் ஒன்று விழுந்த சத்தம் கேட்டதாக கூறினர். அப்பகுதியில் மீட்புக்குழுவினர் தேடும் பணியில் ஈடுபட்டபோது, விமானம் விழுந்து நொருங்கி விபத்துக்குள்ளானது தெரிய வந்தது. விமானத்தில் பயணித்த 4 பேரும் உயிரிழந்தனர். (நி-4-8)

## டில்லியில் ஊரடங்கு நீடிப்பு

(டில்லி)

டில்லியில் கொரோனா இரண்டாம் அலை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் ஒரே நாளில், 24 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு உள்ளதுடன் 357 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுக் காலை, 5 மணியுடன் முடிவுக்கு வருவதாக இருந்த ஊரடங்கு வைரஸ் பரவலைத் தடுக்க மேலும் ஒரு வாரம் நீடிக்கப்பட்டுள்ளது. (நி-4-8)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-3 124 581**

**தொற்று :-147 871 365**

**(நேற்றைய நிலவரம்)**

## இந்தியாவுக்கு உதவும் கூகுள் கைகொடுக்கும் மைக்ரோசொப்ட்

(டில்லி)

கொரோனாவால் கடுமையான நெருக்கடியை சந்தித்துள்ள இந்தியாவுக்கு 135 கோடி ரூபாய் நிதி உதவி அளிப்பதாக கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது.

கொரோனா பாதிப்பால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள இந்தியாவுக்கு சர்வதேச நாடுகள் ஆதரவுக்கரம் நீட்டியுள்ளன. .



கொரோனாவால் மிகக் கடுமையான நெருக்கடியை சந்தித்துள்ள இந்தியாவுக்கு கூகுள் நிறுவனம் 135 கோடி ரூபாய் நிதி உதவியை அளிக்க இருப்பதாக சுந்தர் பிச்சை தெரிவித்துள்ளார்.


அதேபோல், மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி சத்ய நாடெல்லா, இந்தியாவின் கொரோனா சூழல் குறித்து தெரிவித்திருப்பதாவது.

இந்தியாவில் தற்போது நிலவும் சூழல்கடும்வேதனை அளிக்கிறது. ஒட்சிசன் கருவிகள் போன்ற மருத்துவ பொருட்களை வழங்குவதற்கு மைக்ரோசொப்ட் நிறுவனம் தொடர்ந்து ஆதரவு அளிக்கும்" எனத் தெரிவித்துள்ளார். (நி-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகலை தோட்டக்குடியிருப்பில் தீ விபத்து

## •6 வீடுகள் சேதம் •30 பேர் பாதிப்பு



(ஹற்றன்)

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இராகலை மத்திய பிரிவில் 16 வீடுகளைக் கொண்ட தொடர் குடியிருப்பில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் 6 வீடுகள் பகுதியளவில் எரிந்து தீக்கிரையாகின.

இந்த வீடுகளில் குடியிருந்த 6 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தீவிபத்தால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படாத போதிலும் பெருமளவில் பொருட் தேசங்கள் ஏற்பட்டுள்ளன.

வீட்டு உபகரணங்கள், முக்கிய ஆவணங்கள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளன என்று மக்கள் தெரிவித்தனர். இந்த தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லைஎன்பதோடுமேலதிகவிசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-4)

# இளையோரின் எதிர்காலத்தை தெரிந்தே சீரழிக்க வேண்டாம் - ரணில் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டிற்கு பல்வேறு வகையிலும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையிலேயே அரசாங்கம் துறைமுக நகர் தொடர்பான ஆணைக்குழு சட்ட மூலத்தை தயாரித்துள்ளது.

இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தை தெரிந்தே சீரழிக்க வேண்டாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள்பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். அவ்வாறானதொரு பாதகமான நிலைமை ஏற்படுமாயின் அதிலிருந்து மீள்வதற்கு இலங்கைக்கு நீண்ட காலம் தேவைப்படும் எனவும் எச்சரித்துள்ளார். துறைமுக நகரத்தை சூதாட்ட ஸ்தலமாகவும் கறுப்பு பணபரிமாற்ற நிலையமாகவும் மாற்றும் நோக்கம் இல்லையெனில் அரசாங்கம் அதனை தெளிவாக அறிவிக்க வேண்டும்.

அத்தோடு இதற்கான திருத்தங்களை சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து தற்போது தயாரிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்தில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார். (நி-4)

## இலங்கை ஏகாதிபத்திய நாடு இல்லை

# இது ஒரு ஜனநாயக நாடு

## பேச்சு சுதந்திரத்தை யாரும் பறிக்க முடியாது

(கொழும்பு)



நாட்டு மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்க முடியாத அரசாங்கம் எதிர்க்கட்சி உறுப்பினர்களை வேட்டையாடி, கைது செய்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

12 இலட்சம் தடுப்பூசிகளை இறக்குமதி செய்து அதில் 9 இலட்சம் பேருக்கு முதலாவது தடுப்பூசியை செலுத்திவிட்டு, இரண்டாவது தடுப்பூசியை செலுத்த முடியாது அரசாங்கம் திண்டாடி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அம்பாந்தோட்டை - கிரிந்த பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

நாட்டில் இன்று அரசாங்கத்தின் அடக்குமுறை தொடர்வதாகவும் அரசாங்கத்தை விமர்சிக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தேடித் தேடி கைது செய்யப்படுகின்றனர்.

இது ஏகாதி பதித்திய நாடு இல்லை. ஜனநாயக நாடு என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். கருத்து வெளியிடும் சுதந்திரத்தை தட்டிப் பறிக்க யாருக்கும் இடமளிக்க முடியாது.

69 இலட்சம் மக்கள் வாக்களித்து ஆட்சியில் அமர்த்தியது இவ்வாறு அடக்குமுறை செய்யவா? என சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார். (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2296

### காருண்யா




### கனகாம்பரி




### வர்சினி




### துருபதன்




### ரஜீவன்




### ரவிச்சந்திரன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதவுகள் எப்பொழுதும் திறந்தே உள்ளன வெளியேறுபவர்கள் வெளியேறலாம்

## மகிந்த காட்டம்

(கொழும்பு)

**"அரசு முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களை அரசுக்குள் இருந்து விமர்சிக்கும் நபர்கள் அரசில் இருந்து வெளியேறி தமது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்" இவ்வாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஆளும் கட்சி உறுப்பினர்களிடம் ஆவேசத்துடன் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது,

"அரசில் இருந்து வெளியேற நினைப்பவர்களுக்காகக் கதவுகள் திறந்துள்ளன".

"அரசாக எடுக்கும் தீர்மானங்கள் சகலரையும் சார்ந்ததாகும். அரசுக்குள் இருந்து கொண்டு அரசை விமர்சிப்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயம் அல்ல.

அரசை விமர்சிக்கும் ஜனநாயக உரிமை சகலருக்கும் இருக்கின்றது. எனினும், ஆட்சியாளர்கள் அல்லது ஆளும் கட்சிக்குள் உள்ள அமைச்சர்கள், உறுப்பினர்கள் அரசை மோசமாக விமர்சித்து நெருக்கடிகளை ஏற்படுத்துவதானது ஆட்சியைக் கொண்டு செல்லக் கடினமானதாக அமையும்.

அரசில் இருந்து வெளியேற நினைப்பவர்களுக்காகக் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும். அவர்கள் வெளியில் சென்று தமது விமர்சனக் கருத்துக்களை முன்வைக்க முடியும்" என பிரதமர் தெரிவித்தார். (நி-4)

# பொதுபல சேனாவை இதுவரை தடை செய்யாதது ஏன்?

## முஷாரப் கேள்வி

(கொழும்பு)

தேசிய நல்லிணக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பொதுபல சேனா அமைப்பு செயற்படுகிறது.

ஆகவே அவ்வமைப்பு தடை செய்யப்பட வேண்டும் என உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள போதும் இதுவரையில் பொதுபல சேனா அமைப்பு தடை செய்யப்படவில்லை.

மாறாக அறிக்கையில் குறிப்பிடப்படாத பல அமைப்புக்களே தடை செய்யப்பட்டுள்ளன என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

குண்டுத்தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் என பெயர் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு செயலாளர், பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கைகளும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவர்களுக்கு எதிராக இதுவரை எவ்வித நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படாத நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் கைது செய்யப்பட்டுள்ளமை குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.(நி-4)

# மன்னிப்புக் கோரியது சீனக்கப்பல் நிறுவனம்

(கொழும்பு)

கதிரியக்க பொருளுடன் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் பிரவேசித்த கப்பலின் உள்நாட்டு பிரதிநிதித்துவ நிறுவனம் தமது தவறை ஏற்று இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு மன்னிப்புக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

நெதர்லாந்தில் இருந்து சீனா நோக்கி பயணித்த குறித்த கப்பல், கடந்த 20 ஆம் திகதி இரவு 9 மணியளவில் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்குள் பிரவேசித்திருந்தது.

இதன்போது கப்பலில் உள்ள பொருட்கள் தொடர்பில் துறைமுக அதிகாரசபைக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பு உள்ளூர் பிரதிநிதிகளுக்கு காணப்படுகின்றது.

எனினும். உள்ளூர் பிரிதிநிதிகள் அதனை உரிய முறையில் செய்திருக்கவில்லை.

எவ்வாறாயினும் கப்பலில் கதிரியக்க பொருள் அடங்கியுள்ளமை துறைமுக அதிகாரசபை மற்றும் கடற்படையினரால் வெளிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து, அணுசக்தி சட்டத்தின் 18 மற்றும் 48 ஆம் சரத்துகள் மீறப்பட்டமையினால் விடயத்திற்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து குறித்த கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டது.(நி-4)

# வட்டவளையில் 15 பேருக்கு கொரோனா

(ஹற்றன்)

வட்டவளை பகுதியில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 15 பேருக்கு கொவிட்-19 தொற்றுதியாகியுள்ளது.

இவ்வாறு தொற்றுறுதியானவர்களில் முன்னர் தொற்றுறுதியானவர்களுடன் தொடர்புடைய சிலரும் அடங்கு [illegible] ளது (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நிழல் மனிதர்கள்

ஒருத்தன் வேகமாக ஓடிவந்தான். ஏன் இப்படி தலைதெறிக்க ஓடி வருகின்றாய் என்று கேட்டேன். பின்னால் துரத்திக் கொண்டு வருகிறது சேர் என்றான். நாய் துரத்திக் கொண்டு வருகிறது போல இருக்கிறது என நினைத்து அவனுக்குப் பின்னால் பார்த்தேன். கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் எதுவும் தெரியவில்லை.

எதுவும் உன்னைத் துரத்தவில்லையே என்றேன். நன்றாகப் பாருங்கள் சேர் என்றான். பார்த்துக் கொண்டுதான் சொல்கிறேன் என்றேன். இதோ பாருங்கள் சேர் இதுதான் என்னைத் துரத்துகின்றது என்றான். அவன் சுட்டிக்காட்டிய இடத்தில் பார்த்தேன். அங்கே அவனுடைய நிழல் தான் தெரிந்தது.

என்னப்பா சொல்கின்றாய்? என்று அவனைக் கொஞ்சம் சந்தேகமாகப் பார்த்தேன். அதற்குப் பின்பு அவன் விபரமாகச் சொன்னான். சேர் எனக்கு என் நிழலைக் கண்டால் பிடிக்கிறதில்லை. எப்பொழுது பார்த்தாலும் இது என்னையே பின் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றது. இதை என்னாலே சகிக்கவே முடியவில்லை. இதை என்னிடமிருந்து பிரிப்பதற்கு எவ்வளவோ முயற்சிகள் எல்லாம் செய்து பார்த்துவிட்டேன் முடியவில்லை என்றான்.

அப்படி என்னென்ன முயற்சிகள் செய்தாய்? என்று கேட்டேன். அவன் என்னென்ன செய்தான் என்பதை விபரமாகச் சொன்னான்.

ஒரு பெரிய குழியைத் தோண்டி அதிலே தன்னுடைய நிழலைப் புதைத்து விடுவோம் என்று முடிவு செய்து கொண்டு மண்வெட்டியை எடுத்துக் கொண்டு தோட்டத்துப் பக்கம் போனான். ஆழமாக ஒரு குழியைத் தோண்டினான். குனிந்து பார்த்தான். அந்தக் குழிக்குள்ளே தன்னுடைய நிழல் தெரிந்தது.

ஆகா...இதுதான் சமயம்... நிழல் இப்பொழுது குழிக்குள்ளே இருக்கின்றது. மண்ணைப் போட்டு மூடி விடலாம் என்று நினைத்துக்கொண்டு கொஞ்சம் மண்ணை அள்ளிப் போட்டான். பார்த்தால் இப்பொழுது நிழல் அந்த மண்ணுக்கு மேலே வந்திருக்கிறது. இது ஏதுடா வம்பாகப் போய் விட்டது என்று அவசர அவசரமாக மண்ணை வாரிப் போட்டான். குழி முழுவதும் மூடிவிட்டு பார்க்கின்றான். மறுபடியும் நிழல் மேலே வந்து உட்கார்ந்திருக்கிறது. சரி... இதை குழியில் புதைக்க முடியாது என்று முடிவு செய்து கொண்டு இதை இங்கேயே இப்படியே விட்டுவிட்டு ஓடிப் போய் விடுவோம் என்று நினைத்து எடுத்தான் ஓட்டம்.

அது காலை நேரம். இவன் மேற்கே நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றான். ஓடி ஓடிப் பார்க்கின்றான். நிழல் இவனை விட வேகமாக இவனுக்கு முன்னாடி ஓடிக் கொண்டிருக்கின்றது. சரி...திரும்பி ஓடிப் பாப்போம் என்று நினைத்துக் கொண்டு அப்படியே சடார் என்று திரும்பி ஓட ஆரம்பித்தான்.

அப்பாடா...நிழலைக் காணவில்லை. கொஞ்சத் தூரம் ஓடி ஒரு இடத்திலே நின்று சாவகாசமாக திரும்பிப் பார்க்கின்றான். பின்னால் நிழல் துரத்துகின்றது.

இப்படி ஓடி வந்துதான் இங்கே என் முன்னால் நின்று தன்னுடைய அவஸ்தையைச் சொல்லிக் கொண்டு இருக்கின்றான். இந்த நிழலைத் துரத்த அல்லது வெட்டிவிட ஏதாவது ஒரு வழி சொல்லுங்க சேர் என்றான்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. அந்த நேரம் பார்த்து ஒரு பெரியவர் வந்தார். அவரிடம் யோசனை கேட்டோம் என்ன செய்யலாம் என்று.

அவர் சொன்னார்... நீ அங்கேயும் இங்கேயும் ஓடாதே... அப்படியே கீழே படுத்துக் கொள் என்றார். அது நல்ல உச்சிவேளை. அவன் அப்படியே படுத்துக் கொண்டான். இப்படியும் அப்படியும் திரும்பிப் பார்த்தான். நிழலைக் காணவில்லை. அவன் இப்பொழுது தான் நிம்மதியாக இருந்தான்.

இப்பொழுது அந்தப் பெரியவர் சொன்னார்...எல்லா மனிதர்களுமே இப்படித்தான் ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். நான்-எனது என்கின்ற ஆணவம் தான் அவர்களைத் துரத்திக் கொண்டிருக்கு. அதை விட்டுவிட்டு ஓடவேண்டும் என்று நினைத்தாலும் அது முன்னால் வந்து நிற்கின்றது.

பரம்பொருளை நோக்கி ஓடும் போது இந்த ஆணவம் பின்னால் வந்து விடுகின்றது. பரிபூரண சரணாகதி என்கின்ற நிலையில் அது முழுவதுமாக மறைந்து விடுகிறது. தன்னை உணர்கின்ற வேளை அது. அந்தநேரம் மனிதனுக்கு விடுதலை உணர்வு ஏற்படுகின்ற நேரம். அப்படிப்பட்ட சுதந்திர மனிதர்களாக எல்லோரும் மாறிவிட்டால் இந்த உலகமே இன்பமயம்.

எங்கள் ஆள் ஒருத்தன் வேகமாக ஓடி வந்து கொண்டிருந்தான். ஏன்டா இப்படி ஓடி வருகின்றாய்? என்று கேட்டார் எதிரிலே வந்தவர். ஆசை துரத்துகின்றது. அதுதான் ஓடி வருகின்றேன் என்றான்.

உனக்கு என்ன ஆசை? என்று கேட்டார்.

எனக்கு ஒன்றும் ஆசை இல்லை. என்னை எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என்று பொலிஸ்காரங்களுக்கு ஆசை.


அந்த ஆசை இப்பொழுது என்னை துரத்திக் கொண்டு பின்னால் வருகின்றது. அதுதான் தப்பித்து வந்து கொண்டிருக்கின்றேன். குறுக்கே நிற்காதீர்கள். வழி விடுங்கள் என்று சொல்லிக் கொண்டே வேகமாக ஓடி மறைந்தான்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 24 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்



திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்
கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தற்போதைய கட்டடத்தின் ஓர் விரிவாக்கமாக காணப்படவிருக்கும் மூலத்திட்டத்தின் மூன்றாவது கட்டடத்துக்கு 3,017,632 ரூபாய் செலவுகளுக்கான ஒரு மதிப்பீட்டில் ஏற்கனவே வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுத் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அது அங்ஙனம் இருக்க, தற்போதுள்ள கட்டடத்தின் (திருத்தப்படத்தக்க) அதன் வடபாகத்துக்கான மீள்விப்பு மற்றும் புதுப்பித்தல் வேலைகள் 293,296 ரூபாவுக்கான ஒரு மதிப்பீட்டுச் செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. கடந்த மனித உரிமைகள் தினத்தில் (அதாவது 1982 டிசெம்பர் 10 ஆம் திகதியில்) இருந்து ஒரு கருநிலையில் யாழ்ப்பாண பொதுசன நூல் நிலையத்தின் ஆதாரச் சேவைகளை மீளவும் ஆரம்பித்துள்ளோம் என்பதுடன் ஆதரவாளர்கள், நலன் விரும்பிகளால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பாடப் புத்தகங்களுடன் உசாத் துணை நூல்நிலையம் அங்கு ஏலவே தொழிற்படத் தொடங்கி விட்டது.

இடவசதி இல்லாத காரணத்தினால் யாழ்ப்பாண நகர மண்டபத்தின் ஒரு பகுதியில் இயங்கி வந்த செய்திப் பத்திரிகைகள் மற்றும் பருவ வெளியீடுகள் பிரிவுகளும் இப்பொழுது இடம்பெயர்க்கப்பட்டுள்ளன. 1983 ஏப்ரல் மாத இறுதிக்குள் சிறுவர் நூல்நிலையத்தையும் இரவல் கொடுக்கும் நூல்நிலையத்தையும் திறந்து வைக்கலாமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

யாழ்ப்பாணப் பொதுசன நூல் நிலையத்தின் மீள்விப்புக்கும் புதுப்பித்தலுக்குமாக நாளதுவரை, அதாவது 1983 ஏப்ரல் 14 ஆம் திகதி வரை சேர்ந்த தொகை 4,454,907.72 ரூபாவாகும். அண்மையில் இருவேறு சந்தர்ப்பங்களில் அமெரிக்கத் தூதுவராலயம் அண்ணளவாக நான்கு இலட்சம் ரூபாய் பெறுமதி வாய்ந்த புத்தகங்களை அன்பளிப்புச் செய்திருந்ததுடன், எதிர்காலத்தில் மேலும் உதவியளிக்கப்படுமென உத்தரவாதமும் அளித்துள்ளது.

யாழ்ப்பாண ஐக்கிய கிறிஸ்தவ சங்கத்தின் மூலம் யாழ்ப்பாண பொதுசன நூல்நிலைய நம்பிக்கை நிதிக்கு ஏற்கனவே ஒன்றரை இலட்சம் ரூபாவை ரொக்கமாக அன்பளிப்புச் செய்துள்ள உலகத் திருச்சபைகள் கழகம், தனது பெயரில் நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்யும் பொருட்டு புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்காக அதே நிறுவனத்திடம் மேற்கொண்டும் பத்து இலட்சம் ரூபாவுக்கான ஒரு தொகையை மீண்டும் அன்பளிப்புச் செய்துள்ளது.

லண்டனில் உள்ள தமிழர் விவகாரங்களுக்கான நிலையக் குழுவினரிடமிருந்து நாற்பத்தி நாலு தேயிலைப் பெட்டிகள் நிறைந்த புத்தகங்களும், மெல்பேர்ன் ஈழத் தமிழர் கழகத்திடம் இருந்து பதினொரு தேயிலைப்பெட்டிகள் நிறைந்த புத்தகங்களும் ஏற்கனவே எமக்குக் கிடைத்துள்ளன. அவ்வாறு செய்வதை நாம் மிகவும் விரும்புகின்ற பொழுதிலும் இந்த அறிக்கையைச் சுருக்குவதன் பொருட்டு கிடைக்கப்பெற்ற தனிப்பட்ட அன்பளிப்புகள் அனைத்தையும் விபரமாகக் குறிப்பிடாமைக்கு எம்மை மன்னிக்கும்படி வேண்டுகிறோம்.

நூல்நிலையத்தைத் திரும்பக் கட்டுவதற்காகவும் அதன் சேவைகளை விரிவுபடுத்துவதற்காகவும் அவர்கள் அளித்துள்ள உதவிக்கும் ஒத்தாசைக்கும் பூபாகம் அனைத்துமுள்ள நிறுவனங்கள் அனைத்துக்கும் தனிப்பட்டோர் ஒவ்வொருவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளும் அதேசமயம் யாழ்ப்பாண மாநகர முதல்வர் பதவியை யாம் துறப்பதற்கு முன்பாக யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையத்துக்கு மனம்போனவாறாக நிகழ்த்தப்பட்ட அழிவின் எதிர்வரும் இரண்டாவது ஆண்டு நிறைவை இவ்வாண்டு பொருத்தமான முறையில் அவதானிப்பதற்கு மறந்து போகாதிருக்கும்படியும் எதிர்வரும் ஆண்டுகளிலும் ஒவ்வொரு ஜூன் முதல் நாளிலும் அங்ஙனமே தொடர்ந்து செய்து வரும்படியும் கேட்டுக்கொள்வதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விரும்புகின்றோம்.

இந்த உன்னத நோக்கத்திற்கு உதவியிருக்கக்கூடிய தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் எமது நன்றியைத் தெரியப்படுத்துமுகமாகத் தயவுகூர்ந்து எமது இந்தக் கடிதத்தைச் சுற்றுவிநியோகம் செய்ய வேண்டுகிறோம்.

நன்றி.
தங்கள் பணியில்,
இராஜா விசுவநாதன்,
மாநகர முதல்வர், யாழ்ப்பாணம் நகர மண்டபம்,
யாழ்ப்பாணம், 18.04.1983

(குறிப்பு- இராஜா விசுவநாதன் சென்ற ஆண்டு (2020) பெப்ரவரி மாதம் சிட்னியில் காலமானார். இவர் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரனின் தந்தையார் என்பதும் குறிப்பிடத்தக்கது.)

### யாழ் மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் நன்றி நவில்கின்றார்

யாழ்.நூலகத்தின் திருத்த வேலைகள் முடிந்து திறப்பு விழாவுக்கு ஆயத்தங்கள் நடைபெறும் போது யாழ்.மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் 22.05.1984 திகதியிடப்பட்ட அறிக்கை மூலம் நன்றி தெரிவித்திருந்தார். அவ் அறிக்கை பின்வருமாறு.

யாழ்.நூலகத்தைத் திருத்துவதிலும் புனரமைப்பதிலும் பலபேர், பல நிறுவனங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டார்கள். வேறு யாரையும் அவர்கள் செய்த சேவைகளையும் பங்களிப்பையும் குறைத்து மதிப்பிடாமல், பின்வருவோரை இந்த அறிக்கையில் நன்றியறிதலுடன் நினைவுகூருகின்றேன்.

1) ஜனாதிபதி நிதியிலிருந்து 20 இலட்சம் ரூபாவை ஒதுக்கிய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனாவுக்கு.

2) 1983 மே மாதம் 31 வரையுள்ள காலத்தில் நகராதிபதியாக இருந்த இராஜா விசுவநாதன்.
அவர் முன்னின்று முயற்சியுடன் திட்டப் பணிகளில் ஈடுபடாவிட்டால் இந்த வேலைகள் இன்னமும் முடியாதிருக்கலாம்.

3) முன்னைநாள் காங்கேசன் துறை பாராளுமன்றப் பிரதிநிதியும் எதிர்க்கட்சித் தலைவருமான ஏ. அமிர்தலிங்கம்.
இவரை விசேடமாக நினைவுகூர வேண்டும். ஏனென்றால் இவரே அரசாங்கத்திடம் நட்டஈடு பெற்றுத் தந்தவர்.

4) நன்கொடைகளைப் பெற்றுத் தருவதில் முன்னின்று உழைத்தவர்களான முன்னைநாள் நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் எம். சிவசிதம்பரம், யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் வி.யோகேஸ்வரன், கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் ஆலாலசுந்தரம் ஆகியோர்.

5) கட்டடக்கலைஞர் வி.எஸ். துரைராஜா, அவரின் உதவியாளர், ஊழியர்கள், கட்டட வரைபடங்களை தயாரித்து உதவியமைக்கும், வேண்டிய நேரத்தில் முன்னின்று கடமையாற்றியமைக்கும்.

6) வெவ்வேறு பாடசாலைகளிலும் கொடிதினம் ஒழுங்கு செய்த யாழ்ப்பாண சென்.பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண.சுவாமி ஜி.ஏ.பிரான்சிஸ் யோசேப்பின் முயற்சியால் ரூபாய் 2 இலட்சத்துக்கும் அதிகமான தொகை சேர்த்தமைக்கு இந்தத் தருணத்தில் கல்வி பணிப்பாளருக்கும் பாடசாலை அதிபர்களுக்கும் அவர்களின் ஒத்துழைப்பும் அங்கீகாரமும் தந்தமைக்கு.

7) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினர் நன்கொடை திரட்ட உதவியதோடு, சுமார் ரூ.2 இலட்சம் பெறுமதியான புத்தகங்களையும் அன்பளிப்புச் செய்தமைக்கு.

8) "யாழ்ப்பாணப் பொதுசன நூலக புனரமைப்புத் திட்டக் கொழும்புக்குழு" அங்கத்தவர்களாகிய கட்டடக் கலைஞர் வி.எஸ். துரைராஜா, வீ.ஆர்.வடிவேற்கரசன், சட்டத்தரணி கே.கந்தசுவாமி, எஸ்.திருச்செல்வம், ஐ.ரீ.சம்பந்தன், ஈ. சண்முகம், எஸ்.பி.சாமி ஆகியோர் கொழும்பில் நூலக வாரத்தை ஏற்பாடு செய்தும் பணச் சேகரிப்பில் உதவியும் சேவை செய்தமைக்கு தமிழ்நாடு அரச நர்த்தகியான செல்வி சுவர்ணமுகியைக் கொண்டு நடன நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தமைக்காக வடிவேற் கரசனுக்கு விசேட நன்றியறிதலைத் தெரிவிக்க வேண்டும். சுவர்ணமுகிக்கும் நாம் நன்றியறிதலைச் சொல்ல வேண்டும்.

9) உள்ளூராட்சி, வீடமைப்பு, மற்றும் நிர்மாணிப்பு செயலாளர் பி. பாஸ்கரலிங்கம். இவர் செலவு செய்யத் தேவையான அதிகாரம் அளித்தமைக்கும் கட்டட திணைக்களத்தின் அதிகாரிகளையும் விசேடமாக தலைமை கட்டுமானப் பொறியியலாளர் கலாநிதி செல்வி பி.சிவப்பிரகாசபிள்ளை மற்றும் சிரேஷ்ட கட்டுமானப் பொறியியலாளர் பி.நாகநாதனையும் சேவைக்காகத் தந்துதவியமைக்கு.

10) கட்டடத்தின் திருத்த வேலைப் பணிகளில் எமக்கு வழிகாட்டிய கலாநிதி செல்வி சி.பி. சிவப்பிரகாசபிள்ளைக்கு.

11) கட்டடத் திணைக்களத்தின் சிரேஷ்ட கட்டுமானப் பொறியியலாளர் பி.நாகநாதன், எந்த நேரமும் தலத்தில் நின்று கட்டடத்தின் முன்னேற்றத்தைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்து உரிய ஆலோசனைகளைக் கூறியமைக்கு.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான இடமாக கொழும்பு

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டின் 22 மாவட்டங்களில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று பரவல் காணப்படுவதாகவும் எதிர்வரும் இரண்டு வாரங்களில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றும் சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றி மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் அமைச்சு மக்களை கேட்டுக் கொண்டுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் பிலியந்தல தலங்கம, கோட்டே, கொட்டாவ மற்றும் மொரட்டுவை பகுதிகளிலேயே நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-4)




# வாழ்வை வளமாக்கும் பூஜை – விரதமுறைகள்

### விரதங்கள்

## மார்கழி பாவை நோன்பு

(தொடர்ச்சி...)

### மார்கழி நீராடலின் மகத்துவம்



**பனி விழும் மாதம் மார்கழி. இம்மாதத்தில் ஆண்கள் அதிகாலையில் எழுந்து ஆறு, குளத்திற்குச் சென்று நீராடிவிட்டு பகவானின் நாமத்தை கூறிக்கொண்டும் திருவெம்பாவை, திருப்பாவை திருப்பள்ளியெழுச்சி பாடல்களைப் பாடிக்கொண்டு வீதிகளில் செல்வார்கள். கோவிலுக்குச் சென்றும் வழிபடுவர். அந்த நேரத்தில் பெண்கள் வெளியில் செல்ல முடியாததால், வீட்டில் குளித்துவிட்டு வீட்டின் வாசலை தெளித்து பெருக்கி, பெரிய கோலங்கள் போடுவார்கள். மார்கழி மாதத்தில் அதிகாலை நேரத்தில் ஓசோன் வாயு கீழே வெளிப்படுகிறது. அது வியாதிகளைக் கட்டுப்படுத்தும் தன்மைகொண்டது. அந்த நேரத்தில் ஓசோன் நம்மீது பட்டு உடல் ஆரோக்கியம் பெறுகிறது என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. இதனால் தான் மார்கழி மாதத்தில் பொழுது விடியும் நேரத்தில் நீராடி நோன்பு நோற்கும் முறை உருவானது.**

**"மார்கழி திங்கள், மதிநிறைந்த நன்னாள், நீராட போதுவீர் போதுமினோ நேரிழையீர்" என்று திருப்பாவை பாடிய ஆண்டாள் விடியற் காலையில் அனைவரையும் அழைத்துப் பாவை நோன்பு கடைப்பிடிக்க வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கது.**

திருப்பாவையைப் போலவே திருவெம்பாவையும் ஒரு பெண் மற்றவரை மார்கழி அதிகாலை பொழுதில் எழுப்புவதாக அமைந்துள்ளது. சிவபெருமான் திருவண்ணாமலையில் மாணிக்கவாசகரிடம் "கோவை பாடிய வாயால் பாவை பாடு" என்று கேட்க மாணிக்கவாசகர் பெண் பாவத்தில் நின்று சிவபெருமானை நாயனாக நினைத்துப் பாடினார்.

"சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை" என்று தேனினுமினியது அப்பாடல்கள்.

திருப்பாவை, திருவெம்பாவை நூல்கள் இரண்டும் பாவை நோன்பு மார்கழி நோன்பினைப் பாடுகின்றன. சிவாலயங்களில் மாணிக்கவாசகர் அருளிய திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களும் பாடப்படுகின்றன.

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஆண்டு முழுவதும் அதிகாலை சுப்ரபாதம் பாடல்கள் பாடப்படும். மார்கழி மாதம் முழுவதும் திருப்பாவை பாடல்கள் பாடப்படும். இது இம்மாதத்திற்குப் புகழ் சேர்ப்பதாகும்.

மேலும் வைஷ்ணவ ஆலயங்களில் இராப்பத்து, பகல்பத்து என்ற முறையில் நாலாயிரத்திவ்ய பிரபந்தம் பாராயணம் செய்யப்படும். 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தை நீராடல் என்ற நோன்பு வழிபாட்டை தை மாதத்தில் மேற்கொண்டனர்.

பின்னர் அது மார்கழி மாதத்திற்கு மாறிவிட்டது. வைகுண்ட ஏகாதசி, திருவாதிரை, அனுமன் ஜெயந்தி போன்ற பண்டிகைகளும் இம்மாதத்தில் வருகின்றன. எங்கும் பக்தி, எதிலும் தெய்வீகம். இவை அனைத்தும் மார்கழியின் சிறப்பாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித்துளிகள்

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 177 பேர் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் மாத்திரம் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 177 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அவர்களுள் 134 பேர் மேல் மாகாணத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. இதுவரை தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 3470 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-4)

## தீவிர சிகிச்சைப் பிரிவில் அதிகளவான தொற்றாளர்கள்

(கொழும்பு)

ஹோமாகம அரசு மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் நேற்று கொவிட் -19 நோயாளிகள் சடுதியா அதிகரித்துள்ளதாக மருத்துவமனைபணிப்பாளர் டாக்டர் ஜனித் ஹெட்டியாராச்சி தெரிவித்தார். 15 வயதிற்கு உட்பட்ட 5 சிறுவர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் ஏழு கொவிட் நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக, முன்கூட்டிய குழந்தை பிரிவு மற்றும் இரண்டு கூடுதல் விடுதிகள் கொவிட் நோயாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. தற்போது 5 விடுதிகளில் சுமார் 120 கொவிட் நோயாளிகள் சிகிச்சை பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## முன்பள்ளி ஆசிரியருக்கு கொரோனா தனிமைப்படுத்தலில் சிறார்கள்

(கொழும்பு)

மதவாச்சி பகுதியில் உள்ள ஒரு முன்பள்ளியின் 20 குழந்தைகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று அநுராதபுர பிராந்திய தொற்று நோயியல் நிபுணர் டாக்டர் தேஜனா சோமதிலகா தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட முன்பள்ளியின் ஆசிரியருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதால் குழந்தைகளைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மருத்துவர் தெரிவித்தார். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 120 |
| தக்காளி | 80 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 |
| கோவா | 140 | 100 | 120 |
| கரட் | 170 | 140 | 240 |
| பூசணி | 70 | 60 | 40 |
| புடோல் | 120 | 80 | 100 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 220 | 280 | 240 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 140 | 150 |
| பயற்றங்காய் | 150 | 160 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 80 | 120 |
| கறிமிளகாய் | 180 | 140 | 140 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 500 |
| போஞ்சி | 200 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 140 | 120 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 80 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 180 | 180 | 250 |
| வெங்காயப்பூ | 280 | 120 | 240 |
| முள்ளங்கி | 60 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 |
| வல்லாரை | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | — | 100 | 120 |

# யானைகள் அட்டகாசம் அச்சத்தில் மக்கள்

(தருமபுரம்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புதுக்காடு மற்றும் மாயனூர் பகுதிகளில் தினமும் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தாங்கள் சொல்லொணாத் துயரினை அனுபவித்து வருவதாக தெரிவித்ததுடன் நேற்று முன்தினம் இரவு 10 அளவில் குடியிருப்புக்குள் புகுந்த யானை பப்பாசி மரங்கள், 48 தென்னை



மரங்கள் மற்றும் வாழை, கற்றாழை, சிறு தானியப் பயிர்கள் என்பவற்றை அழித்துள்ளது. மக்களால் யானையை விரட்ட முடியவில்லை. அதிகாலையில் 3 மணியளவில் தான் யானை அவ்விடத்திலிருந்து சென்றது. இதனால் தாம் ஒவ்வொரு நாளும் அச்சத்துடன் வாழ்வதாகத் தெரிவித்தனர். எனவே நமக்கு நிரந்தரமான ஒரு தீர்வை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக விரைவில் பெற்றுத் தர வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். (5-4-316)



இயற்கை முறையிலான விவசாய செய்கைகளை மேற்கொள்ளும் முயற்சியாளர்களுக்கான விதைகள் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் குழுத்தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் நேற்று மடு பரசன்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் வழங்கப்பட்டன. (படம்: ஜோசப் நயன்)




கொரோனா வைரஸ் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் நோக்குடன் வவுனியாவில் தொற்று நீக்கும் செயற்பாடுகள் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (படங்கள்: சதீஷ்)

# ஆர்.பி.ஜி. குண்டுகள் முல்லைத்தீவில் மீட்பு



(பனிக்கன்குளம்)

புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் அடிப்படையில் முல்லைத்தீவில் நேற்று 10 ஆர்.பி.ஜி.குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தண்ணிமுறிப்பு 5 ஆம் கண்டம் பகுதியில் வயல் நிலங்களை அண்மித்த வனப் பகுதியில் இக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதிக்கு விசேட அதிரடிப் படையினரை அழைத்துச் சென்ற புலனாய்வுப் பிரிவினர் அப்பகுதியில் இருந்து பத்து ஆர்.பி.ஜி குண்டுகளை மீட்டுள்ளனர்.

இக்குண்டுகள் நீதிமன்ற அனுமதியுடன் தகர்த்தழிக்கப்படவுள்ளன.

(5-4-281)


# புகையிரதக் கடவைக்கு பாதுகாப்பு ஊழியரை நியமிக்குமாறு கோரிக்கை

(மன்னார்)

நானாட்டான்-உயிலங்குளம் பிரதான வீதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற நிலையில் காணப்படும் மாதோட்டம் மணற்குளம் புகையிரத கடவையை பாதுகாப்பான முறையில் அமைத்து, குறித்த புகையிரத கடவைக்கான பாதுகாப்பு ஊழியர் ஒருவரையும் நியமிக்குமாறு மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வாரம் குறித்த பாதுகாப்பற்ற புகையிரத் கடவையில் புகையிரதத்தில் மோதும் நிலையில் தெய்வாதீனமாக உயிர் தப்பிய சம்பவம் இடம்பெற்றது.

இவ்விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,



இந்தப்புகையிரதக்கடவை ஊடாக தினமும் அதிகளவானோர் பயணம் செய்கின்றனர்.

மேலும், தற்போது உயிலங்குளம் நானாட்டான் பிரதான வீதி காப்பெற் வீதியாக புனரமைப்பு செய்யப்படுவதால் முன்பை விட அதிகமானவர் போக்குவரத்திற்காக இவ் வீதியூடாக வருகின்றனர்.

மாதோட்டம் மணற்குளம் புகையிரத நிலையத்தில் பாதுகாப்பான புகையிரத கடவையாக அமைத்து பாதுகாப்பு ஊழியர் ஒருவரை நியமித்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-285)



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை. செல்வாவின் 44 ஆவது நினைவு நிகழ்வுகள் நேற்று யாழ். தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜா தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ் .மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரெட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படம்: சிவசாந்தன்)



வவுனியாவில் தந்தை செல்வாவின் 44 ஆவது நினைவு தின நிகழ்வுகள் வவுனியா மணிக்கூட்டுக் கோபுரச் சந்திக்கு அருகிலுள்ள தந்தை செல்வா நினைவுத் தூபியில் இடம் பெற்றது.



சுப்பிரமணியம் வள்ளியம்மையின் அகரம் எனது சிகரம் என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் அக்கராயன் மகா வித்தியாலத்தில் நடைபெற்றது. அதிபர் வரதாராசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் விருந்தினர்களாக கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் வேழமாலிகிதன், யாழ். கல்வி வலயத்தின் முன்னாள் பணிப்பாளர் திருமதி வேதநாயகம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் லிசீசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (படம்: யதுபாஸ்கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வ நம்பிக்கை, தன்னம்பிக்கை, அன்பு செலுத்தும் குணம், ஒருமுகச் சிந்தனையுடன் செயல்படும் ஆற்றல் இந்த நான்கும் உள்ள மனிதர்கள் தாங்கள் விரும்பிய இலட்சியத்தை அடைந்தே தீருவார்கள். - நியூட்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இராமருக்கு முடிசூட்டுவதற்கு முன்னர் தோள்புயங்களை அளந்த தசரதர்

இராமபிரானுக்கு முடிசூட்டுவதற்கு முன்னதாக இராமனின் தோள்புயங்களை தசரத மாமன்னன் அளந்து பார்த்ததாக கம்பன் பேசுவான்.

அயோத்தி மாநகரை ஆள்வதற்கு இராமனுக்குத் தகுதி உண்டா? என்பதை அறிவதற்காகவே இராமனின் தோள்புயங்கள் அளக்கப்பட்டன.

இராமனுக்கு நாடாளும் தகுதி உண்டென்பது தசரதனுக்குத் தெரிந்த விடயமாயினும் நாடாளும் மன்னனைத் தெரிவு செய்யும் போது, அதற்கான அளவீடுகள் உண்டு.

அந்த அளவீடுகளைப் பொருத்திப் பார்த்து அதற்கு உரியவன் என உறுதி செய்த பின்பு, பட்டாபிசேகம் செய்வதுதான் முறைமை என்ற அடிப்படையிலேயே தசரதர் இராமரின் தோள்புயங்களை அளந்தார்.

அயோத்தியை ஆளும் தகைமையுடையவன் இராமன் என்பதை தசரதர் நிரூபித்த தன் காரணமாக; பின்னாளில் பரதன் சிம்மாசனத்தில் இருக்க மறுத்தான் என்று விளக்கம் கூறுவதும் ஏற்புடையது.

அதாவது அயோத்தி மாநகரை ஆள்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டவன் இராமன்.

எனவே அவன் காடேகியபோதிலும் அந்த ஆசனத்துக்கு உரியவாறு தெரிவு செய்யப்படாத யான் அமர்வது ஏற்புடையதன்று எனப் பரதன் கருதியதால், அரியணையில் இராமரின் பாதுகைகளை வைத்து ஆட்சி செய்தான் என்று கூறுவதில் தவறில்லை.

ஆக, மன்னனாக, மந்திரியாக, முதலமைச்சராக, பாராளுமன்ற உறுப்பினராக வருவதற்குத் தகுதி நிலை பார்க்கப்பட வேண்டும் என்பது ஏற்புடைய நியாயம்.

அந்த வகையில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்தால் முதலமைச்சர் வேட்பாளர் யார்? என்ற கேள்வி தமிழ் அரசியல்வாதிகளிடையே எழுந்துள்ளது.

வடக்கு மாகாணத்துக்குத் தகுதியான முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பது பற்றி வடபகுதித் தமிழ் மக்கள் இன்னமும் சிந்தித்திலர்.

அவர்களைப் பொறுத்தவரை அரசியல் என்பது வெறுப்புக்குரியதாயிற்று.

தவிர, தமிழ் அரசியல்வாதிகளில் ஒரு சிலரைத் தவிர ஏனையவர்களிடம் நேர்மைத்தனம் இல்லை என்பதை அவர்கள் ஆணித்தரமாக நம்புகின்றனர்.

எனவே காவேரிதான் சிங்காரி. சிங்காரிதான் காவேரி என்பது தமிழ் மக்களின் நிலைப்பாடு.

எதுஎவ்வாறாயினும் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்தால், அதில் தகுதியான முதலமைச்சர் வேட்பாளரை நியமிப்பதென்பது அவசியமாகிறது.

ஆக, தகுதியான முதலமைச்சர் வேட்பாளர் ஒருவரை இனங்காண்பது அவசியம் என்பதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை.

ஆனால் இங்குதான் ஒரு சிக்கல் ஏற்படுகிறது.

அதாவது வடக்கு மாகாண சபைக்கான முதலமைச்சர் வேட்பாளர் பதவிக்குத் தகுதியானவர் நானே! என்று கை உயர்த்துகின்ற அளவில் நிலைமை இருப்பதுதான் கவலைக்குரியதாகிறது.

எனக்குத் தகுதி உண்டென்று நானே சொல்வது நாகரிகமானதல்ல என்பதுதான் நம் நிலைப்பாடு.

(சுகாதார அமைச்சினால்)

## கிளிநொச்சி வைத்தியசாலைக்கு ரூபாய் 100 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் இரண்டாம் கட்ட அபிவிருத்தியின் ஒருகட்டமாக 100 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டிற்கு மத்திய சுகாதாரஅமைச்சினால் அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இவ்வருடம் 50 மில்லியன் ரூபாவும், அடுத்த வருடம் 50 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வைத்தியசாலையின் தேவைகள் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையால் முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பரிந்துரையுடன் மத்திய சுகாதார அமைச்சுக்கு முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அதற்கான அனுமதியினை சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது.

இதன்படி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் இரண்டாம் கட்ட அபிவிருத்தியின் ஒரு பகுதியாக ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் நிரந்தர ஆய்வுகூட கட்டடம் அமைத்தல், ஆய்வுகூட உபகரணங்கள் கொள்வனவு செய்தல் போன்ற வற்றுக்கு குறித்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதாக மாவட்ட வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ம-3,350)

## அரசை கவிழ்க்க வலை விரிக்கப்பட்டு விட்டது

### லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தி தற்போதைய அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான வலையை ஏற்கனவே விரித்து விட்டதாகவும் தேவையான நேரத்தில் அரசாங்கத்தை கவிழ்க்கப் போவதாகவும் அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார.

கண்டி யட்டிநுவர தொகுதிக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான அலுவலகத்தை கட்டுகஸ்தோட்டை நகரில் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அரசாங்கத்தினால், பொருளாதாரத்தை நிர்வாகம் செய்ய முடியாமல் போயுள்ளது. அனைத்துக்கும் கோவிட் பரவலை காரணமாக காட்டுகின்றனர். எனினும் இந்தியா, இங்கிலாந்து போன்ற நாடுகள் கோவிட் பரவல் இருந்த போதிலும் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளன. இது தான் எமது நாட்டுக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையில் உள்ள வித்தியாசம்.

எமது நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. அரசாங்கத்திடம் நிதி இல்லை என்பதே இதற்கு காரணம். மக்களிடம் வரி விதிப்பதை தவிர நிதியை திரட்ட அரசாங்கத்திடம் வேறு வழிகள் இல்லை.உண்மையில் அரசாங்கம் தற்போது நாட்டின் நிர்வாகத்தை கைவிட்டுள்ளது. எவ்வித நிர்வாகமும் இல்லை. அரசாங்கத்தின் அதிகாரங்களில் பெரும்பான்மையான அதிகாரங்களை ராஜபக்ச குடும்பத்தினர் தமக்குள் பகிர்ந்து கொண்டுள்ளனர் என்றார். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 28 ஆம் திகதிபுதன்கிழமைகாலை 8 மணியிலிருந்து பிற்பகல்5 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** வீரபுரம், மகாறம்பைக்குளம், சமணங்குளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** பிற்பகல் 1 மணி முதல் 5 மணிவரை கள்ளிக்கட்டைக்காடு, முதலைக்குத்தி, நொச்சிகுளம், புதுக்காமம், உயிலங்குளம், வட்டுப்பித்தன்மடு, சீனத் துறைமுகம், கமலாம்பிகை அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும்.

முல்லைத்தீவில் இடம்பெறவிருந்த

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்கள் ஒத்திவைப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் இரு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் ஒத்திவைக் கப்பட்டுள்ளன.

மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய இரு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் இன்று நடைபெறவிருந்தது. கோவிட்-19 அச்சுறுத்தல் காரணமாக இரு கூட்டங்களும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் முற்பகல் 9.30 மணிக்கும் துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிற்பகல் 2.00 மணிக்கும் நடைபெறவிருந்த நிலையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இரு பிரதேச செயலாளர்களும் அறிவித்துள்ளனர். (ம-3,350)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்




நாம் வைரம் விலைகூடியதென நினைக்கிறோம். வைரத்துக்கு மதிப்பைக் கொடுப்பது யார்? மனிதன்! நாம் தங்கத்துக்கு விலையதிகம் என்று கூறுகிறோம். அதற்கு மதிப்புக் கொடுப்பது யார்? மனிதன்! பங்களாவுக்கும் நிலத்துக்கும் மதிப்புள்ளது. அவற்றுக்கு மதிப்பு கொடுப்பது யார்? மனிதன். ஆகவே மனிதனின் மதிப்புத்தான் மிக மிக அதிகம்.

சமுதாயத்தின் நெறிமுறைப்படி யார் நல்லவர்? எவரிடம் மூன்று குணங்களும் உள்ளனவோ அவர் நல்லவர். அந்தக் குணங்கள் யாவை? தெய்வ ப்ரீதி, பாப பீதி, சங்க நீதி (இறையன்பு, தீவினை அச்சம், சமுதாய ஒழுக்கம்). இம்மூன்று குணங்களும் ஒரு மனிதனை உன்னதமான இடத்துக்கு உயர்த்தும்.

தெய்வீக அன்பினால் உங்கள் இதயத்தை நிரப்பிக் கொண்டு ஆனந்தத்தை அனுபவியுங்கள். நீங்கள் புனித நூல்களைப் படிப்பதால் ஆனந்தத்தைப் பெறமுடியாது. வேறெவரும் உங்களுக்கு அதைச் சொல்லித்தர முடியாது. அது தனக்குள்ளிருந்து வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா புகுந்த நாடும் ஆமை புகுந்த வீடும் என்றுமே உருப்படாது - இராதாகிருஷ்ணன்



(பதுளை)

மலையக மக்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இந்த நாட்டின் பெரும்பான்மை சமூகம் செய்த அநீதிக்கு இன்று இந்த நாடு துண்டாடப்பட்டு பகுதி பகுதியாக விற்பனை செய்யப்படுகின்றது.

இது ஒரு துரதிர்ஷ்டமான நிலைமை என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பதுளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று இலங்கை என்ற அழகிய தீவு ஒவ்வொரு நாட்டிற்கும் துண்டாடப்பட்டு விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்த நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தால் பொதுமக்கள் பலர் கொன்று குவிக்கப்பட்டார்கள். அதேபோல 83 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரத்தின் பொழுது மலையக மக்கள் அனைத்து இடங்களிலும் பாதிக்கப்பட்டார்கள்.

அன்று அந்த விடயங்களை நினைத்தும் பார்த்தும் ஒரு சில பெரும்பான்மை சமூகத்தினர் சந்தோசப்பட்டார்கள்.

இந்த நாடு தமிழர்களுக்கு சொந்தமில்லை. இது தனியே பெரும்பான்மை மக்களுக்கான நாடு என்று பிரசாரம் செய்தார்கள்.

ஆனால் இன்று இலங்கையின் நிலை என்ன? பல நாடுகள் ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியே விலை பேசி வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்குக் காரணம் பெரும்பான்மை சமூகம் இந்த நாட்டில் இருக்கின்ற அனைவரையும் இந்த நாட்டின் பிரஜைகளாக நினைக்கவில்லை.

தனியே இந்த நாடு பெரும்பான்மை மக்களுக்கு சொந்தமான நாடு என கூறுகின்றார்கள். இந்த நிலைமை தொடருமானால் இன்னும் ஒரு சில வருடங்களில் இலங்கையில் பல தீவுகள் உருவாகலாம். அதன் முதலாவது தீவாக தற்பொழுது கொழும்பில் அமைக்கப்பட்டு வருகின்ற போட்சிட்டி என்று சொல்லப்படுகின்ற அபிவிருத்தி சீனாவின் தீவாக மாறிவிடும்.

இப்படி பல தீவுகள் இங்கே உருவாகி இலங்கை என்ற ஒரு நாடு இல்லாமல் போய்விடும். எனவே இந்த நாட்டை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாக இருந்தால் நாம் அனைவரும் இலங்கையர் என்ற வகையில் ஒன்றுபட வேண்டும்.

அப்படி ஒன்றுபடாவிட்டால் ஆண்டவன் கூட இந்த நாட்டை காப்பாற்ற முடியாது. எனவே இந்த நாட்டின் பெரும் பான்மை சமூகம் தமிழர்கள், முஸ்லிம்கள் ஏனையவர்களையும் தங்களுடைய குடும்பத்தில் ஒருவராக கருத வேண்டும்.

அப்படி செய்தால் நிச்சயமாக இந்த நாட்டை காப்பாற்ற முடியும். இல்லாவிட்டால் சீனா புகுந்த நாடும் ஆமை புகுந்த வீடும் என்றுமே உருப்படாது என்பதுதான் உண்மை. எனவே இதனை புரிந்து இந்த அரசாங்கம் நடந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# வாகன விபத்தில் சிறுமி உயிரிழப்பு

(கிண்ணியா)

கிண்ணியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரை ஏக்கர் பகுதியிலேயே இந்த வாகன விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்திலேயே ஒன்பது வயதுச் சிறுமி பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

காலையில் பிரத்தியேக வகுப்புக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருக்கும் வேளையில் எதிரே வந்த லொறி மோதியதில் சிறுமி பலியாகியுள்ளார்.

விபத்து இடம்பெற்றதை அடுத்து சிறுமி கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததையடுத்து சடலம் அங்கிருந்து பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# திருமண நிகழ்வுகளுக்கு தடையில்லை என்கின்றார் இராணுவத் தளபதி

(கொழும்)

நாட்டில் திருமண நிகழ்வுகள் நடத்துவதற்கு தடையில்லை என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

சுகாதாரப் பாதுகாப்பு முறையின் கீழ் திருமண நிகழ்வுகளுக்கு மாத்திரம் அனுமதி வழங்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே திருமண நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் அதனை நிறுத்த முடியாதென்பதனால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

எனினும் நாட்டில் பரவும் கொரோனா நிலைமை தொடர்பில் கருத்திற் கொண்டு சுகாதார பாதுகாப்பு முறைகளுக்கு அமைய திருமண நிகழ்வுகள் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# ஹெரோயினுடன் 8 பேர் கைது

(கொழும்பு)

போதைப்பொருள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப்புக்களில் ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் 8 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-4)

# பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தபோது மைத்திரிபால சிறிசேன உதவினார்

## சஜித் தெரிவிப்பு



(கொழும்பு)

தனது பயணத்தைத் தடுப்பவர்கள் கட்சியை விட்டு வெளியேறுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த காலங்களைப் போல எவரும் தங்கள் வேலையில் தலையிட அனுமதிக்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தன்னை நோக்கி வந்த அனைத்து பிரச்சினைகளின் போதும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு உதவியதாகவும் மேலும் எவ்விதமான பிரச்சினைகள் காணப்பட்டாலும் மக்களுக்காக சேவை செய்ய உதவிய மனிதர்களில் அவரும் ஒருவர் என்றும் சஜித் பிரேமதாஸ சுட்டிக் காட்டினார். (நி-4)

# எதிர்க்கட்சியினருக்கு அச்சுறுத்தல் விடுத்து உண்மையை மறைக்க முயல்கின்றது அரசு

(கொழும்பு)

றிசாத் பதியுதீன் எம்.பி. கைது செய்யப்பட்டுள்ளார். எம்.பிக்களான ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோர் மீதும் கைது மேகங்கள் சூழ்கின்றன.

இவற்றின் மூலம் இன்றைய அரசு, எதிக்கட்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்து நாட்டின் உண்மையான பிரச்சினைகளை மறைக்க முயல்கின்றது என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.தெரிவித்தார். நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

றிசாத் எம்.பியை அதிகாலை அழைத்து ஊடறுத்து அவரது வீடு சுற்றிவளைத்து ஒரு பாதாள உலகக்



கேடியை இழுத்துச் செல்வதைப் போல் கொண்டு சென்றதன் மூலம் இந்த அரசு எமக்குச் சொல்கின்ற செய்தி என்ன?

தன் மீது குற்றஞ்சாட்ட சாட்சியங்கள் இருந்தால் தன்னை விசாரியுங்கள் என றிசாத் எம்.பியே பலமுறை கூறியுள்ளார்.

நௌபர் மௌலவி என்பவரே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் சூத்திரதாரி எனவும் அறிவித்து விட்டு, இப்போது றிசாத்தை இந்த அரசு கைது செய்தள்ளது.

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, நௌபர் மௌலவியை சூத்திரதாரியாக ஒப்புக் கொள்ளாததால், அவரை சமாளிக்க றிசாத்தை இந்த அரசு கைது செய்கின்றது என்ற பலத்த சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

இதேபோல் தான், நண்பர்களான எம்.பிக்கள் ஹரின், மனுஷ ஆகியோர் மீதும் கைது மேகங்கள் சூழ்கின்றன. நாளை இது இன்னும் மேலும் பலரையும் சுற்றிவளைக்கும். ஆகவே, நாம் இந்தப் பின்னணியைப் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணல் ஏற்றியவர்...

யில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலி பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பொன்னையா நிமலன் (வயது-28) என்பவரே படுகாயங்களுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

பாலாவியில் உள்ள வயல் காணிகளில் உழவு இயந்திரம் மூலம் சட்டவிரோத மணற் கடத்தல்காரர்கள் மணல் கடத்தலில் ஈடுபட்டுள்ளனர். அவ்வாறான ஒரு வயலின் உரிமையாளர் நேரில் சென்று மணல் அகழ்வை தடுத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து கெற்பேலியில் உள்ள வயலின் உரிமையாளரது வீட்டுக்கு நேற்று திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் சென்ற மணற் கடத்தல் காரர்கள் மண்வெட்டி மற்றும் சவள்களால் தாக்கி படுகாயங்களுக்கு உள்ளாக்கியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸாரே படுகாயங்களுக்குள்ளானவரை மீட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.(ம-3,30,33,60)

## மயங்கி விழுந்த...

துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

அவரது வீட்டிற்கு முன்பாக உள்ள ஒழுங்கை வழியாக நடந்து செல்லும் போது மயங்கி விழுந்ததாகவும், விழுந்தவரை மீட்ட அயலவர்கள் உடனடியாக அவரை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும் அவர் ஏற்கெனவே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் நாவற்காடு வரணிப் பகுதியைச் சேர்ந்த 72 வயதான நீலன் சின்னவன் என்ற முதியவரே உயிரிழந்தவராவார். (ம-3,30)

## இலங்கையில்...

பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரு கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்படவுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, இம்புல்கொட மற்றும் கட்டுதம்பே ஆகிய இரு கிராமசேவகர் பிரிவுகளும் நேற்று இரவு 8 மணி முதல் தனிமைப்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்னதாக கம்பஹா, திருகோணமலை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலுள்ள சில பகுதிகளிலும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பெண் நோயாளர்...

பெண் மற்றும் பூநகரி பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் என இருவர் காய்ச்சல் காரணமாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் தங்கி சிகிச்சை பெற்று வந்த நிலையிலும் மற்றும் வெளிநோயாளர் பிரிவில் மருந்து எடுக்க வந்த கம்பஹா பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கும் இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் கம்பஹா பகுதியைச் சேர்ந்த நபர் விடுதியில் தங்கி சிகிச்சை பெறாமையால் அவரை உடனடியாக அடையாளம் காண முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-3,30)

## பாடசாலைகளை...

தும் உள்ள பாடசாலைகளையும் மூட எந்த முடிவும் எடுக்கப்படாது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, பாடசாலைகள் மூடப்பட வேண்டுமா?, வேண்டாமா? என்பது குறித்து தேவையான முடிவுகளை எடுக்க அந்தந்த பாடசாலை அதிபர்களுக்கு வாய்ப்பு வழங்க கல்விஅமைச்சு முடிவு செய்துள்ளது.

"நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளை மூடுவதால் கோவிட் - 19 ஆபத்து இல்லாத பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான கல்வி இழக்கப்படும்.

எனவே, அதிக ஆபத்துள்ள பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மட்டுமே மூடவேண்டிய அவசியம் ஏற்பட்டால், அந்த பகுதிகளில் உள்ள கல்வி அதிகாரிகளுக்கு அவ்வாறு செய்வதற்கான வாய்ப்பை வழங்குவது மிகவும் பொருத்தமானது" என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார். (ம-3)

## மேல் மற்றும் வட...

பள்ளி மற்றும் பிரிவெனா பாடசாலைகளை எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதிவரை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் (கோவிட் 19) பரவல் காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (ம-3)

## யாழில் பச்சிளம்...

குழந்தைக்கும் சாவகச்சேரியில் 4 பேருக்கும் தெல்லிப்பழையில் தாதி ஒருவர் உட்பட 3 பேருக்கும் யாழ்.போதனா வைத்தியசாலையில் 2 பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட 3 பேர், சண்டிலிப்பாய் பகுதியில் ஒருவருக்கும் மன்னார் மாவட்டத்தில் 2 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்றார். (ம-3,18,33)

## அதிக கொரோனா...

இதற்கமைய நாட்டில் தொற்றுறுதியானோர் எண்ணிக்கை 102,376 ஆக அதிகரித்துள்ளது.

முன்னதாக கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் 976 பேருக்கு தொற்றுறுதியாகி இருந்தமையே நாளொன்றின் அதிகபட்ச தொற்றுறுதியாக இருந்தது.

கடந்த 23ஆம் திகதி 969 பேருக்கு தொற்றுறுதியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 3 பேர்...

பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 647 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.(ம-3)

## கொரோனா ஆபத்...

கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில் பரவுகின்ற கொரோனா வைரஸானது காற்று மூலம் அதிகளவில் பரவுவ தாக சுகாதார தரப்பினர்கள் அச்சம் வெளியிடும் நிலையில், பொதுமக்கள் தேவையற்ற போக்குவரத்துக்களை தவிர்ப்பது நல்லது.

ஆகவே பாடசாலைகள் அனைத்தும் இயங்க ஆரம்பித்துள்ள நிலையில், அனைவரும் சுகாதார நடைமுறைகளை உரியமுறையில் பின்பற்றாவிட்டால் எதிர்வரும் நாட்களில் முடிவுகளில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.(ம-3)

# ஸ்ரான்லி கல்லூரி மீண்டும் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் முடக்கப்பட்ட நிலையில் இன்று காலை கிருமித் தொற்று நீக்கி விசிறப்பட்ட பின் பாடசாலை இடம்பெற அனுமதிக்கப்படும் என்று வட மாகாண சுகாதார சேவைகள்பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மேலும் பாடசாலைகள் மற்றும் பொது மைதானங்களில் விளையாட்டு நிகழ்வுகளை நடத்த சுகாதார அமைச்சு தடைவிதித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## உருளை...

தக வரி 50 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. நீதி அமைச்சு இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் உருளைக் கிழங்கு அறுவடை ஆரம்பித்துள்ளதால் இந்த இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

தன நிதானய
திகதி - 2021.04.26
சீட்டிழுப்பு இலக்கம் - 500
D 20 25 26 29
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 26.04.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2758
ஆங்கில எழுத்து A | வெற்றி இலக்கங்கள் 11 39 43 53
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/04/26
சீட்டிழுப்பு இலக்கம் 4463
ஆங்கில எழுத்து 0 | வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 0 3 1 2 8
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 26/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0821
M 09 | 09 28 66 67

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1677 திகதி 2021.04.26
ஆங்கில எழுத்து K | வெற்றி இலக்கங்கள் 07 13 36 77
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/04/25
சீட்டிழுப்பு இலக்கம் 4462
ஆங்கில எழுத்து F | வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 4 6 2 7 7
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1259
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 26.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 130,957,395
வெற்றி இலக்கங்கள் 19 20 21 74 R
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3589
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 26.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 37,631,215
வெற்றி இலக்கங்கள் 12 14 32 59 R
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 4,100,584/=
திகதி: 26.04.2021
வெற்றி வாரம்: 3140
வர்ணம்: மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 06 33 38 40 துலாம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 61,27,880

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1433 | நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 26/04/2021 | தினம் திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் H 05 30 49 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் 53,459,110/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1752
சீட்டிழுப்பு திகதி 26.04.2021
வெற்றி இலக்கங்கள் 45 58 63 64 Z
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 24,662,768
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்கத்தா வெற்றி



பஞ்சாப் 123 / 9 ( 20 ஓவர்கள் )
கொல்கத்தா 126 / 5 ( 16.4 ஓவர்கள் )

# ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமையவே பயணிகள் அனுமதி இ. போ. ச. அறிவிப்பு

(கொழும்பு)

அரசு வெளியிட்டுள்ள புதிய கோவிட் -19 பாதுகாப்பு வழிகாட்டுதலின் கீழ் பொதுப் போக்குவரத்திற்கான விதிமுறைகளை கடைபிடிக்குமாறு, நாடு முழுவதும் உள்ள அனைத்து இ.போ.ச சாலைகளின் பேருந்துகளை இயக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க இதனைத் தெரிவித்தார்.

"தற்போதுள்ள பேருந்தில் உள்ள ஆசனங்களின் எண்ணிக்கைக்கு மட்டுமே பயணிகள் அனுமதிக்கப்படுவார்கள்.

பயணிகளின் போக்குவரத்து சேவைகளுக்காக நாடுமுழுவதும் உள்ள சாலைகளில் இருந்து 5 ஆயிரம் பேருந்துகள் சேவையில் அமர்த்தப்படவுள்ளன" என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-03)



உ
சிவமயம்

## பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் - 2021

### கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் A9 வீதி, கிளிநொச்சி.

2021.04.27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கோவிட் - 19 வைரஸ் தாக்கம் காரணமாக அரசாங்கத்தின் அறிவித்தலுக்கமைய மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபை சார்பில்
ச. ஸ்ரீகௌரிபாலா
தலைவர்

மா. சிவராசா
செயலாளர்

சு. வரதராசா
பொருளாளர்

(C-2045)


உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-2005)
எமது கிளைகள்
கிளிநொச்சி சுன்னாகம் சாவகச்சேரி மானிப்பாய் நெல்லியடி பருத்தித்துறை திருகோணமலை வல்வெட்டித்துறை கோப்பாய் புத்தூர்
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com

ஊர்க்கோழிக்குஞ்சு விற்பனைக்கு
1 மாதம் பூர்த்தியான ஊர்க்கோழிக் குஞ்சு விற்பனைக்கு,
கழுத்து வெட்டியும் உண்டு.
விலை - 185/=
(6715)
077 477 5603

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-2004)
0768226240 DHL

அன்னா EXPRESS Courier Service
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388
(C-2005)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)


# மரண அறிவித்தல்



## சின்னத்துரை சுந்தரலிங்கம்

பிறப்பு : 19.10.1956
இறப்பு : 18.04.2021

யாழ். பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சுந்தரலிங்கம் கடந்த 18.04.2021 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சுபத்திரை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் தவச்செல்வத்தின் அன்புக் கணவரும் டினேஸின் அன்புத் தந்தையும் பூபாலசிங்கம், வேல்முருகன், ரகுபதி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்திரமலர், மாலினி, குணரஜனி, பசுபதி, ஜெயகாந்தன், தவசெல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலச்சந்திரன், கருனேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும் கிருபாகரன், துஷியந்தினி ஆகியோரின் சித்தப்பாவும் ரஜீத், சஞ்ஜீ, நிசோபிதா, சாரங்கி, ஜெனாங்கி, பைரவி, ராகவி, வினோஜி, சினோஜி ஆகியோரின் பெரியப்பாவும் நித்யா, பியந்தினி, பிரதீப், நிருபன், சியாமளா, தீசன், சயந்தா, திலீசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பூயிதா, லிவியா, நேருசா, கவிசாந், பர்சாந், டிலக்ஷன், சமீத், மகிஷா, திசாரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.04.2021) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 10.00 மணியளவில் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(6673)

பண்டத்தரிப்பு
076 650 7850
077 878 7205
தகவல்:-
மகன் (S. டினேஸ்)

# மரண அறிவித்தல்

பிறப்பு 19 - 08 - 1957



இறப்பு 26 - 04 - 2021

## பொன்னுத்துரை அற்புதலிங்கம்

உரும்பிராய் கிழக்கு, மடத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை அற்புதலிங்கம் (பாண்டி) நேற்று (26.04.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும் புஸ்பமலரின் அன்புக் கணவரும் அஜித் (HNDA - உயர் தொழில்நுட்ப கல்லூரி, யாழ்ப்பாணம்), தீபக் (பல்கலைக்கழக மாணவன் - ஊவா வெல்லச ), றஹித் (விவசாய போதனாசிரியர் - முல்லைத்தீவு), திவ்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மகாலிங்கம் (தாரகா லொறி உரிமையாளர்), வசந்தாதேவி, வதனாதேவி (புத்தளம்), சந்திரலிங்கம் (ஜேர்மனி), செல்வலிங்கம் (லண்டன்), ஜெயலலிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விநாயகமூர்த்தி (புத்தூர்), தயாபரன் (சுவிஸ்), புஸ்பவதனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.04.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் உரும்பிராய் இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(6716)

மடத்தடி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
தீபக் : 077 758 8654
தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.